காந்தி ஆசிரம பஜனாவளி

T.13974

தமிழ் நாட்டுக் காந்தி நினைவு நிதி வெளியீடு–2

காந்தி

ஆசிரம பஜனாவளி

கிடைக்குமிடம் :
ஸர்வோதயப் பிரசுராலயம்
திருப்பூர்

முந்திய பதிப்புகள்—(12000)
4-ம் பதிப்பு—செப். '53—(3000)

விலை அணு எட்டு

(நவஜீவன் டிரஸ்டின் அனுமதியுடன் தமிழ்நாட்டுக் காந்தி
நினைவு நிதிக்காக, ஸர்வோதயப் பிரசுராலயம்
வெளியிட்டது)

Kabeer Printing Works, Madras (2310)

முன்னுரை

நவஜீவன் பதிப்பகத்தாரின் 'ஆசிரம பஜனாவளி' என்ற பிரசித்தமான நூலைப்பற்றி மஹாத்மா காந்தி, "அது தனி மனிதர் ஒருவரால் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தொகுக்கப்பட்ட தல்ல; அது தானாகவே வளர்ந்து பெருகிய வஸ்து. அதிலுள்ள சுலோகங்கள், பாடல்கள் ஆகியவை ஒவ்வொன்றும் சேர்ந்ததற்கு தனித்தனி வரலாறுண்டு" என்று கூறுகிறார். இந்த 'காந்தி ஆசிரம பஜனாவளி'க்கு மூல நூல் அதுவேயாகையால் அதி லுள்ளவை சிறிது ஏற்றத்தாழ்வாக இதன் முந்திய பதிப்புகளில் சேர்க்கப்பட்டிருக்க இந்தப் புதிய பதிப்பிலோ அதிலுள்ள ஸம்ஸ்கிருதப் பகுதி முழுமையும் உளது. இந்தப் பதிப்பிலுள்ள தமிழ் அர்த்தப் பகுதி மூலத்துடன் மீண்டும் ஒப்பிட்டு முற்றிலும் நன்கு திருத்தப்பட்டுள்ளது. இதைச் செய்வதில்—அதிலும் முக்கியமாக உபநிடத மணிமாலை, கீதை ஆகியவற்றை—ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரின் 'உபநிஷத்சாரம்' 'ஸ்ரீமத் பகவத்கீதை' என்ற நூல்களின் உதவியை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறோம். அதோடு இதன் சமரஸத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக மூலத்திலுள்ள பார்ஸி, புத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் தோத்திரங்கள் இதில் இருப்பதோடு அதில் இல்லாது இதில் உள்ள ஒரு அம்சம் வினோபாஜி சிறிது காலமாக தம் பிரார்த்தனைகளில் பாடி வரும் சமரஸ பிரார்த்தனை சுலோகங்களாகும். மேலும் மூல நூலிலுள்ள குஜராத்தி, வங்காளி கீதங்கள் இதிலும் இருக்கின்றன. மூல நூலின் பிற்பகுதியான ஹிந்தி பாடல்களுக்குப் பதிலாக தமிழ் நாட்டாரின் தேவையைக் கருதி முந்திய பதிப்புகளில் போலவே இதிலும் தேவார-திருவாசக-திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் முதலியவையும், பாரதியார் பாடல்களும் தரப்பட்டுள்ளன. முந்திய பதிப்புகளில் இல்லாத பல பாசுரங்கள், பாடல்களை இதில் காணலாம். அவைகளில் முக்கியமானவை திருப்பாவை-திருவெம்பாவைப் பாசுரங்களும், இராமலிங்க சுவாமிகளின் ஸர்வோதயக் கருத்துத் ததும்பும் பாடல்களுமாகும். இந்தப் பதிப்பு இதன் பெயருக்குப் பொருத்தமாக காந்தி நிதியின் ஆதரவில் வெளி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இப் புத்தகம் ஏற்கெனவே 12,000 பிரதிகள் செலவாகியிருப்பதிலிருந்து இதற்கு தமிழ் மக்களின் பேராதரவு இருப்பது வெள்ளிடை மலை.

தமிழ்த்தாயின் சீரிளமைக்கு ஏற்ப இதன் தமிழ்ப் பகுதி ஒவ்வொரு பதிப்பிலும் வளர்ந்து அன்பர்களுக்கு மேன்மேலும் பயன்பட வேண்டுமென்ற எம் விருப்பம் இறைவன் அருளால் நிறைவேறுவதாக!

திருப்பூர்.
15-9-53

ஸர்வோதயப் பிரசுராலயம்.

பொருளடக்கம்

		பக்கம்
காலைப் பிரார்த்தனை	...	1
உபநிடத மணி மாலை	...	9
மாலைப் பிரார்த்தனை	...	27
வித்தியாலயப் பிரார்த்தனை	...	37
பெண்கள் பிரார்த்தனை	...	39
பஜ கோவிந்தத்திலிருந்து	...	43
பாண்டவ கீதையிலிருந்து	...	46
முகுந்த மாலையிலிருந்து	...	51
சமரஸப் பிரார்த்தனை	...	59
பதினொரு விரதங்கள்	...	60
பார்ஸி வேத மந்திரம்	...	61
புத்த மத மந்திரம்	...	62
குரானின் பாத்திஹா	...	62
ஆங்கில கீதம்	...	64
குஜராத்தி கீதம்	...	68
வங்காளி கீதம்	...	70
பாசுரங்கள்	...	77
பாடல்கள்	...	93

காந்தி

ஆசிரம பஜனாவளி

காலைப் பிரார்த்தனை

प्रातः स्मरामि हृदि संस्फुरदात्मतत्त्वम्
सच्चित्सुखं परमहंसगतिं तुरीयम् ।
यत् स्वप्नजागरसुषुप्तमवैति नित्यम्
तद् ब्रह्म निष्कलमहं न च भूतसंघः ॥ १ ॥

ப்ராத: ஸ்மராமி ஹ்ருதி ஸம்ஸ்புரதாத்ம தத்வம்
ஸச்சித்ஸுகம் பரமஹம்ஸகதிம் துரீயம் ।
யத் ஸ்வப்ன ஜாகர ஸுஷுப்தமவைதி நித்யம்
தத் ப்ரஹ்ம நிஷ்கலமஹம் நச பூத ஸங்க: ॥ 1 ॥

நான் காலையில் என் உள்ளத்தில் எழும் ஆன்ம தத்துவத்தை நினைக்கின்றேன். எந்த ஆன்மா ஸச்சிதானந்தமோ (உண்மையாயும், ஞானமாயும், இன்பமாயும் உளதோ), எது பரம ஹம்ஸ யோகிகள் இறுதியில் சேருமிடமோ, எது துரீயமெனும் நான்காம் நிலையோ, எது விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளையும் எப்பொழுதும் அறிகிறதோ, எது சுத்த பிரம்மமோ அதுவே நான்—(மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற) ஐம்பெரும் பூதங்கள் சேர்ந்தமைந்த இவ்வுடல் நானல்ல.

प्रातर्भजामि मनसो वचसामगम्यम्
वाचो विभान्ति निखिला यदनुग्रहेण ।
यन्नेतिनेतिवचनैर्निगमा अवोचुः
तं देवदेवमजमच्युतमाहुरग्र्यम् ॥ २ ॥

ப்ராதர் பஜாமி மனஸோ வசஸாமகம்யம்
வாசோ விபாந்தி நிகிலா யதனுக்ரஹேண ।
யந்நேதி நேதிவசனைர் நிகமா அவோசு:
தம் தேவதேவ மஜமச்யுத மாஹுரக்ரயம் ॥ 2 ॥

எவர் மனத்திற்கும், வாக்கிற்கும் எட்டாதவரோ, எவருடைய கருணையினுல் (நால்வகை) வாக்குகளும் வெளியாகின்றனவோ, வேதங்களாலும் எவரை 'நேதி, நேதி' (அவர் இதுவல்ல, அவர் இதுவல்ல) என்பதற்கு அதிகமாய் எதையும் கூறி விளக்க முடியவில்லையோ, அந்த தேவ தேவரென்றும் பிறப்பிலி என்றும், வீழ்ச்சியற்றவரென்றும், அனைத்திற்கும் ஆதி என்றும் ரிஷிகள் புகழும் பிரம்மத்தை நான் காலையில் எழுந்ததும் வழிபடுகின்றேன்.

प्रातर्नमामि तमसः परमर्कवर्णम्
पूर्णं सनातनपदं पुरुषोत्तमाख्यम् ।
यस्मिन्निदं जगदशेषमशेषमूर्तौ
रज्ज्वां भुजंगम इव प्रतिभासितं वै ॥ ३ ॥

ப்ராதர் நமாமி தமஸ: பரமர்க்கவர்ணம்
பூர்ணம் ஸநாதன பதம் புருஷோத்தமாக்யம் ।
யஸ்மின் னிதம் ஜகதஶேஷமஶேஷ மூர்த்தௌ
ரஜ்வாம் புஜங்கம இவ ப்ரதிபாஸிதம் வை ॥ 3 ॥

நான் காலையில் எழுந்ததும் இருளுக்கப்பால் சூரியனையொத்த ஒளியுடன் பொருந்தி புருஷோத்தமனென்ற பெயரினுல் எது உணரப்படுகிறதோ, எதன் எண்ணிலடங்கா

உருவங்களினுள்ளே இவ்வுலகமனைத்தும் கயிற்றில் பாம்பின் தோற்றம் போலக் காணப்படுகிறதோ, அந்த என்றென்றுமுள்ள திருவடியை வணங்குகின்றேன்.

वक्रतुण्ड महाकाय सूर्यकोटिसमप्रभ ।
निर्विघ्नं कुरु मे देव शुभकार्येषु सर्वदा ॥ ४ ॥

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப ।
நிர்விக்னம் குரு மே தேவ ஶுபகார்யேஷு ஸர்வதா ॥

வளைந்த துதிக்கையும், பருத்த உடலும், கோடி சூரியரை ஒத்த ஒளியும் கொண்டு விளங்கும் சித்தி விநாயகரே, நான் தொடங்கும் நற்செயல்களையெல்லாம் எப்பொழுதும் தடையின்றி நிறைவேற்றும்!

या कुन्देन्दुतुषारहारधवला या शुभ्रवस्त्रावृता
या वीणावरदण्डमण्डितकरा या श्वेतपद्मासना ।
या ब्रह्माच्युतशंकरप्रभृतिभिर्देवैः सदा वन्दिता
सा मां पातु सरस्वती भगवती निःशेषजाड्यापहा ॥ ५॥

யா குந்தேந்து துஷாரஹாரதவளா
யாஶுப்ரவஸ்த்ராவ்ருதா
யா வீணாவரதண்ட மண்டிதகரா
யாஶ்வேத பத்மாஸனா ।
யா ப்ரஹ்மாச்யுத ஶங்கர ப்ரப்ருதிபி:
தேவை: ஸதா வந்திதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நி:ஶேஷ ஜாட்யாபஹா ॥ 5 ॥

எவள் மல்லிகை, மதி, பனி ஆகியவற்றாலான மாலையை ஒத்த வெள்ளை நிறத்தினளாய் வெள்ளைக் கலையுடுத்தி, யாழின் அழகிய தண்டைக் கையிலேந்தியவளாய் வெண்டாமரையில் வீற்றிருக்கின்றாளோ, பிரமன், விஷ்ணு,

உருத்திரன் முதலிய தேவரனைவராலும் எவள் எப்பொழுதும் புகழ்ந்து வணங்கப்படுகிருளோ அந்த சரசுவதி தேவி என் அறியாமையையெல்லாம் அகற்றி என்னைக் காப்பாளாக !

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाधारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिभिर्ध्यानगम्यम्
वन्दे विष्णुं भव भयहरं सर्वलोकैकनाथम् ॥६॥

ஶாந்தாகாரம் புஜகஶயனம் பத்மநாபம் ஸுரேஶம்
விஶ்வாதாரம் ககனஸத்ருஶம் மேகவர்ணம்ஶுபாங்கம் ।
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிபிர் த்யானகம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைகநாதம் ॥

அமைதி நிலவும் உருவும், பாம்புப் பாயலும், நாபியில் தாமரையும்கொண்ட எந்த தேவ தேவ்ன் உலகிற்கு ஆதார மாய், வானத்தைப்போல் தொடர்பற்று மேக நிறமுள்ள வனுய், நன்மை பயக்கும் மேனியனுய், லக்ஷ்மீபதியாய், தாமரைக் கண்களொடு யோகிகளின் தியானத்தில் காட்சி யளிக்கிருனே, அந்த எல்லா உலகிற்கும் ஏக நாயகனுய் உலக பயமனைத்தையும் போக்கும் விஷ்ணுவை வணங்கு கின்றேன்.

करचरणकृतं वाक्कायजं कर्मजं वा
श्रवणनयनजं वा मानसं वाऽपराधम् ।
विहितमविहितं वा सर्वमेतत् क्षमस्व
जय जय करुणाब्धे श्रीमहादेव शम्भो ॥ ७ ॥

கரசரணக்ருதம் வாக்காயஜம் கர்மஜம் வா
ஶ்ரவண நயனஜம்வா மானஸம் வாऽபராதம்।
விஹிதமவிஹிதம் வா ஸர்வமேதத் க்ஷமஸ்வ
ஜய ஜய கருணப்தே ஶ்ரீ மஹாதேவ ஶம்போ ॥

கை-கால்களினுலோ, வாய்-உடலினுலோ, காது-கண் களினுலோ, செயலினுலோ, மனத்தினுலோ குறிப்பிட்ட ஒன்றைச் செய்தமையாலோ, செய்யாமையாலோ விளைந்த பாவங்களனைத்தையும், ஏ கருணைக்கடலான ஸ்ரீ மஹா தேவனே, சம்புவே, உன்னைப் பன்முறையும் போற்றுவேன், மன்னிப்பாயாக !

नमस्ते सते ते जगत्कारणाय ।
नमस्ते चिते सर्वलोकाश्रयाय ।
नमोऽद्वैततत्त्वाय मुक्तिप्रदाय
नमो ब्रह्मणे व्यापिने शाश्वताय ॥ ८ ॥

நமஸ்தே ஸதே தே ஜகத்காரணாய
நமஸ்தே சிதே ஸர்வ லோகாஶ்ரயாய ।
நமோऽத்வைத தத்வாய முக்திப்ரதாய
நமோ ப்ரஹ்மணே வ்யாபினே ஶாஶ்வதாய ॥ 8 ॥

உலகிற்குக் காரணமாயுள்ள சத்திற்கு வணக்கம். உலகமனைத்தையும் காத்தருளும் சித்ரூபியான கடவுளுக்கு வணக்கம். அத்வைத ரூபியும் என்றென்றும் நிலைத்திருப்பவரும், முக்தி அளிப்பவரும், எங்கும் உள்ளவருமான பரப்பிரம்மத்திற்கு வணக்கம்.

त्वमेकं शरण्यं त्वमेकं वरेण्यम्
त्वमेकं जगत्पालकं स्वप्रकाशम् ।
त्वमेकं जगत्कर्तृपातृप्रहर्तृ
त्वमेकं परं निश्चलं निर्विकल्पम् ॥ ९ ॥

த்வமேகம் ஶரண்யம் த்வமேகம் வரேண்யம்
த்வமேகம் ஜகத்பாலகம் ஸ்வப்ரகாஶம் ।
த்வமேகம் ஜகத் கர்த்ரு பாத்ரு ப்ரஹர்த்ரு
த்வமேகம் பரம் நிஶ்சலம் நிர்விகல்பம் ॥ 9 ॥

நீயே கதியற்றவர்களுக்கெல்லாம் கதியாவோன். நீயே தலைசிறந்தவன், விரும்பத் தக்கவன். நீயே உலகைப் பாது காப்போன், தன் ஒளியினாலேயே விளங்குவோன். நீயே இந்த சிருஷ்டியை ஆக்கி, அளித்து, அழிப்போன். நீயே அப்பாலாய் அசையாது மாறாதிருப்போன்.

भयानां भयं भीषणं भीषणानाम्
गतिः प्राणिनां पावनं पावनानाम् ।
महोच्चैः पदानां नियन्तृत्वमेकम्
परेषां परं रक्षणं रक्षणानाम् ॥ १० ॥

பயானாம் பயம் பீஷணம் பீஷணானாம்
கதி: ப்ராணினாம் பாவனம் பாவனானாம் ।
மஹோச்சை: பதானாம் நியந்த்ருத்வமேகம்
பரேஷாம் பரம் ரக்ஷணம் ரக்ஷணானாம் ॥ 10 ॥

நீ அச்சங்களை அச்சுறுத்துவோன்; கொடியோருக்குக் கொடுமை விளைப்போன்; உயிர்களுக்கு உற்றவழியும் தூயவைகளைத் தூய்மையாக்குவோனும் நீயே; மிகமிக உயர் பதவிகளை நியமித்து நடத்துவோன் நீயே; அப் பாலுக் கப்பாலாயிருந்து காவலரைக் காப்போனும் நீயே.

वयं त्वां स्मरामो वयं त्वां भजामो
वयं त्वां जगत्साक्षिरूपं नमामः ।
सदेकं निधानं निरालम्बमीशम्
भवाम्भोधिपोतं शरण्यं व्रजामः ॥ ११ ॥

வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ
வயம் த்வாம் ஜகத்ஸாக்ஷிரூபம் நமாம: ।
ஸதேகம் நிதானம் நிராலம்ப மீசம்
பவாம்போதி போதம் சரண்யம் வ்ரஜாம: ॥ 11 ॥

தினமும் உன்னையே நினைந்து உன் புகழையே பாடுகிறோம். உலகின் சாட்சியாயிருக்கும் உன்னைப் பணிகிறோம். சத்திய உருவினனும் ஒரே புகலிடமும் பிற உதவியின்றி தானே நிலைத்தவனும், சம்சார சாகரத்தில் எமக்குப் புணையாய் உதவுவோனுமான ஈசனை வணங்குகிறோம்.

समुद्रवसने देवि पर्वतस्तनमण्डले ।
विष्णुपत्नि नमस्तुभ्यं पादस्पर्शं क्षमस्व मे ॥ १२ ॥

ஸமுத்ரவஸனே தேவி
பர்வதஸ்தன மண்டலே ।
விஷ்ணுபத்னி நமஸ்துப்யம்
பாதஸ்பர்ஶம் க்ஷமஸ்வ மே ॥ 12 ॥

கடலை ஆடையாகவும், மலைகளை ஸ்தனங்களாகவும் கொண்டு விளங்கும் ஏ விஷ்ணுவின் பிராட்டியாரான பூதேவியாரே! நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன். உம் மீது காலால் நடந்து நான் செய்யும் அபசாரத்தை மன்னிப்பீராக!

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥ १३ ॥

குருர்ப்ரஹ்மா, குருர்விஷ்ணுர்
குருர்தேவோ மஹேஶ் வர: ।
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥ 13 ॥

குருவே பிரமன், குருவே விஷ்ணு, மஹேச்வரனும் பரப்பிரம்மமும் குருவே. இத்தகைய குருவுக்கு என் வணக்கங்கள்.

नत्वहं कामये राज्यं न स्वर्गं नापुनर्भवम् ।
कामये दु:खतप्तानां प्राणिनामार्तिनाशनम् ॥ १४ ॥

நத்வஹம் காமயே ராஜ்யம்
நஸ்வர்கம் நாபுனர் பவம் ।
காமயே துக்க தப்தாநாம்
பிராணிநுமார்த்தி நாஶனம் ॥ 14 ॥

மண்ணரசும் வேண்டேன், விண்ணெடு வேண்டேன் மோட்சம்; துன்பத் தீயில் வாடும் மக்களின் துயரைப் போக்குவதையே விரும்புவேன்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां
न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं
लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ १५ ॥

ஸ்வஸ்தி: ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
நியாய்யேன மார்கேண மஹீம் மஹீஶா: ।
கோ பிராஹ்மணேப்ய: ஶுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து ॥ 15 ॥

குடிகள் நன்மைபெறுக; அரசாளுவோர் நியாயமுறை வழுவாது பூமியை ஆளுக; ஆவினங்களும், அந்தணரும் எப்பொழுதும் நலம் பெறுக; உலகனைத்தும் இன்புற்று வாழ்க!

பிரார்த்தனையில் கலந்துகொள்வதின் கருத்து கடவுளுடன் சம்பாஷிப்பதும் ஆன்ம சுத்தியின் பொருட்டு தெய்வீக ஒளியைப் பெறுவதுமே. கடவுளின் உதவிகொண்டு நம்மிடமுள்ள குறைகளைக் களைவது அப்பொழுது சாத்தியமாகிறது.

—காந்திஜி.

உபநிடத மணிமாலை

ओं । ईशावास्यमिदं सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥ १ ॥

ஓம். ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।
தேன த்யக்தேன புஞ்ஜீதா
மாக்ருத: கஸ்ய ஸ்வித் தனம் ॥ 1 ॥

இவ்வுலகில் உள்ளவை அனைத்தையும் ஆக்கியவன் கடவுள்; எனவே அவனை நினைந்து கிடைத்தவற்றைப் பற்றின்றி நுகருக; எவரது உடைமையையும் விழையற்க.

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम्
तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥ २ ॥

ஹிரண்மயேன பாத்ரேண
ஸத்யஸ்யாபிஹிதம் முகம் ।
தத்வம் பூஷன்னபாவ்ருணு
ஸத்யதர்மாய த்ருஷ்டயே ॥ 2 ॥

சூரியனே! பொன் வட்டிலால் சத்தியத்தின் முகம் மறைக்கப்பட்டுள்ளது. சத்தியத்தை நாடும் நான் பார்க்கு மாறு நீ அம் மறைப்பை அகற்றியருள்க!

अग्ने नय सुपथा राये अस्मान्
विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयोध्यस्मज्जुहुराणमेनो
भूयिष्ठां ते नमउक्ति विधेम ॥ ३ ॥

அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான்
விஶ்வானி தேவ வயுனானி வித்வான் ।
யுயோத்யஸ்மஜ் ஜுஹுராணமேனோ
பூயிஷ்ட்டாம் தே நம உக்திம் விதேம ॥ 3 ॥

அக்னியே! (எம் செயலால் விளைந்த) செல்வத்தை அனுபவிப்பதற்கு நல்வழியில் எம்மை அழைத்தேகுவீர். தேவனே! எல்லா எண்ணங்களையும் நீர் அறிவீர். மறைந்திருந்து கெடுக்கும் பாவத்தை அழிப்பீர். தோத்திரங்களை வெகுவாய்ச் சமர்ப்பித்து உம்மை வழிபடுகின்றோம்.

श्रेयश्च प्रेयश्च मनुष्यमेत-
स्तौ संपरीत्य विविनक्ति धीरः ।
श्रेयो हि धीरोऽभिप्रेयसो वृणीते ।
प्रेयो मन्दो योगक्षेमाद् वृणीते ॥ ४ ॥

ஶ்ரேயஶ்ச ப்ரேயஶ்ச மனுஷ்யமேத
ஸ்தௌ ஸம்பரீத்ய விவிநக்தி தீர: ।
ஶ்ரேயோ ஹி தீரோऽபி ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயோமந்தோயோககேஷமாத் வ்ருணீதே ॥ 4 ॥

பரலோக சுகமும், இகலோக சுகமும் மனிதனை நாடி வருகின்றன. நல்லறிவு படைத்தவன் இரண்டையும் நன்கு ஆராய்ந்து அவற்றின் வேறுபாட்டை உணர்ந்தவனாய் இகலோக சுகத்தை விட்டுப் பரலோக சுகத்தைத் தேர்ந்துகொள்கிறான். அறிவிலியோ சுக போகங்களுக்குதவுமென்ற கருத்தினால் இகலோக சுகத்தை ஏற்கிறான்.

सर्वे वेदा यत्पदमामनन्ति
तपाꣳसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति
तत्ते पदं संग्रहेण ब्रवीमि ॐ इत्येतत् ॥ ५ ॥

ஸர்வே வேதா யத்பத மாமனந்தி
தபாꣳஸி ஸர்வாணி ச யத்வதந்தி ।
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யஞ் சரந்தி
தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீமி ஓமித்யேதத் ॥

வேதங்கள் எல்லாம் எந்தப் பதத்தை விளக்குகின்றனவோ, தவங்கள் எல்லாம் எதைக் குறிக்கோளாய்க் கொண்டு நாடுகின்றனவோ, எதை விரும்பி (மோட்சம் விரும்புவோர்) பிரம்மசரியமனுஷ்டிக்கின்றார்களோ, அந்தப் பதத்தை உனக்குச் சுருங்கக் கூறுவேன்: அது 'ஓம்' என்பதேயாம்.

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥ ६ ॥
इन्द्रियाणि हयानाहुर्विषयांस्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥ ७ ॥

ஆத்மானம் ரதினம் வித்தி ஶரீரம் ரதமேவது ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹ மேவச ॥ 6 ॥
இந்த்ரியாணி ஹயாஹுர்
விஷயாம்ஸ்தேஷு கோசரான் ।
ஆத்மேந்த்ரியமனோ யுக்தம்
போக்தேத்யாஹுர்மனீஷிண: ॥ 7 ॥

உடலே தேர், மனமே கடிவாளம், புத்தியே தேர்ப் பாகன், ஜீவனே தேரில் வீற்றிருப்பவனென அறி. ஞானிகள் புலன்களைக் குதிரைகள் என்றும், விஷயங்களை அவை செல்லும் பாதைகள் என்றும் உடல், புலன்கள், மனம் ஆகியவற்றுடன் கூடிய ஜீவனையே நுகருவோன் என்றும் கூறுவர்.

विज्ञानसारथिर्यस्तु मनः प्रग्रहवान्नरः ।
सोऽध्वनः परमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥ ८ ॥

விஜ்ஞானஸாரதிர் யஸ்து
மன: ப்ரக்ரஹவாந்நர: ।
ஸோऽத்வன: பரமாப்னோதி
தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥ 8 ॥

எந்த மனிதனின் புத்தியென்ற பாகன் அறிவுள்ளவனாய் மனமென்ற கடிவாளத்தைத் திறமையுடன் பற்றியிருக்கின்றானோ அவன் இந்த சம்சாரத்தின் அக்கரையை அடைந்து விஷ்ணுவின் சிறந்த பதத்தைப் பெறுகின்றான்.

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान्निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया
दुर्गं पथस्तत्कवयो वदन्ति ॥ ९ ॥

உத்திஷ்ட்டத ஜாக்ரதப்ராப்ய வராந் நிபோதத ।
க்ஷுரஸ்ய தாராநிஶிதா துரத்யயா
துர்கம் பதஸ்தத் கவயோ வதந்தி ॥ 9 ॥

எழுக! விழிக்க! சிறந்த ஆசிரியரை யடைந்து ஞானம் பெறுக! அவ்வழி கத்தியின் முனைபோல் கூரியது, நடக்கவும் கடக்கவுங் கடினமானது என்று ஞானிகள் கூறுவர்.

अग्निर्यथैको भुवनं प्रविष्टो
रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा
रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ १० ॥

அக்னிர்யதைகோ புவனம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ ।
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்த ராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச ॥ 10 ॥

ஒரே தீ உலகப் பொருள்களிற் புகுந்து அந்தந்தப் பொருளின் உருவத்துக்குத் தக்கவாறு தனித்தனி உரு வுடையதானதுபோல, உயிர்களனைத்துக்கும் ஒன்றேயாகிய அந்தரான்மா அந்தந்த உருவிற்குத் தக்க உருவுடையதாகி அவைகட்கப்பாலும் உளதாயிற்று.

वायुर्यथैको भुवनं प्रविष्टो
रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्व भूतान्तरात्मा ।
रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ ११ ॥

வாயுர் யதைகோ புவனம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ ।
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச ॥ 11 ॥

ஒரே வாயு உலகின் பல்வேறு பொருள்களுடன் தொடர் புற்றுப் பல்வேறு உருவைத் தாங்குவதைப் போல, உல கெங்கும் பரவியுள்ள ஒரே அந்தரான்மா பல்வேறு உருத் தாங்கியபோதிலும் அவற்றிற்குப் புறம்பே சுய உருவில் தனித்து நிற்கின்றது.

सूर्यो यथा सर्वलोकस्य चक्षुर्
न लिप्यते चाक्षुषैर्बाह्यदोषैः ।
एकस्तथा सर्व भूतान्तरात्मा ।
न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥ १२ ॥

ஸூர்யோ யதா ஸர்வ லோகஸ்ய சக்ஷுர்
ந லிப்யதே சாக்ஷுஷைர் பாஹ்ய தோஷை: ।
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்தராத்மா
ந லிப்யதே லோகது: கேன பாஹ்ய: ॥ 12 ॥

உலகுக்கெல்லாங் கண்ணுயுள்ள சூரியன் கண்ணின் சாதாரணக் குற்றங்களால் பற்றப்படாததுபோல உயிர்களனைத்துக்கும் ஒன்றேயாகிய அந்தரான்மா உலகத் துன்பங்களால் பற்றப்படாது அவைகட்கப்பால் உளது.

एको वशी सर्व भूतान्तरात्मा
एकं रूपं बहुधा यः करोति ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरा-
स्तेषां ँ सुखं ँ शाश्वतं नेतरेषाम् ॥ १२ ॥

ஏகோ வஶீ ஸர்வ பூதாந்த ராத்மா
ஏகம் ரூபம் பஹுதா ய: கரோதி ।
தமாத்மஸ்த்தம் யே ऽனுபஶ்யந்தி தீரா—
ஸ்தேஷாம்ँ ஸுகம்ँ ஶாஶ்வதம் நேதரேஷாம் ॥

பொருள்களனைத்துக்கும் அந்தரான்மாவும் ஆண்டவனுமாகிய எந்த ஒருவன் ஒன்றேயாகிய தன் வடிவைப் பலவாய்ச் செய்கின்றுனே அவனை எந்த தீரர்கள் (மகான்கள்) தம்மிடம் உறைபவனுய்க் காண்கின்றுர்களோ அவர்களுக்கே அழிவிலாச் சுகம் உண்டு, பிறர்க்கில்லை.

नित्योऽनित्यानां चेतनश्चेतनानाम्
अेको बहूनां यो विदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरा-
स्तेषां शान्तिः शाश्वती नेतरेषाम् ॥ १४ ॥

நித்யோ ऽநித்யானும் சேதனஶ்சேதனுனும்
ஏகோ பஹூனும் யோ விததாதி காமான் ।
தமாத் மஸ்தம் யே ऽனுபஶ்யந்தி தீரா—
ஸ்தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் ॥

நிலையிலாப் பொருள்களிடை நிலைத்தவனாய், அறிவுள்ள உயிர்களின் அறிவாய், ஒருவனாய் நின்று அனைவருடைய ஆசைகளையும் அளிப்பவனாயுள்ள அவனை எந்த தீரர்கள் (மகான்கள்) தம்மிடம் உறைபவனாய்க் காண்கின்றார்களோ, அவர்களுக்கே அழிவிலாச் சாந்தி உண்டு, பிறர்க்கில்லை.

न तत्र सूर्यो भाति, न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति, कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥ १५ ॥

ந தத்ர ஸூர்யோபாதி, ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி, குதோ ऽயமக்னி: ।
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ 15 ॥

அங்கே சூரிய சந்திரனோ நட்சத்திரங்களோ பிரகாசிப்பதில்லை, மின்னும் மின்னுவதில்லை எனின் இந்த அக்னி எங்ஙனம் பிரகாசிக்கும்? சுயம் பிரகாசனான அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றன; அவனொளியாலேயே இவையனைத்தும் விளங்குகின்றன.

तपः श्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये
शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः ।
सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति
यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा ॥ १६ ॥

தப: ஶ்ரத்தே யே ஹ்யுபவஸந்த்ய ரண்யே
ஶாந்தா வித்வாம்ஸோ பைக்ஷ சர்யாம் சரந்த: ।
ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥ 16 ॥

எவர்கள் புலன்களை அடக்கி சாந்தி யெய்திய வர்களாய் அறிவு நிறைந்தவர்களாய்ப் பிச்சை யேற்று அரணியத்தில் தவத்திலும் சிரத்தையிலும் வாழ்கின்ருர் களோ, அவர்கள் அழுக்கு நீங்கிய மனத்தினராய்ச் சூரிய மார்க்கத்திற் சென்று மரணமும் மாறுதலுமற்ற ஆன்ம புருஷனிருக்கும் பிரம்மலோகத்தை அடைகின்றனர்.

परीक्ष्य लोकान्कर्मचितान् ब्राह्मणो
निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।
तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्
समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥ १७ ॥

பரீக்ஷ்ய லோகான் கர்ம சிதான் ப்ராஹ்மணோ
நிர்வேதமாயாந்நா ஸ்த்ய க்ருத: க்ருதேன ।
தத்விஜ்ஞானர்த்தம் ஸ குருமேவாபி கச்சேத்
ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்ம நிஷ்ட்டம் ॥

கடவுள் வேட்கையுள்ளவன் கருமத்தாலடையக் கூடிய உலகங்களைச் சோதித்து செயலற்ற பரம்பொருள் ஒரு செயலாலும் அடைதற்குரியதன்றெனக் கண்டு வைராக்கி யம் அடையவேண்டும். (அங்ஙனமடைந்த) அவன் 'தத்' எனும் அப் பரம்பொருளை உணர்ந்துய்யும் பொருட்டு கையுறையுடன் வேதக் கேள்வியிற் சிறந்த பிரம்ம நிஷ்டரான குருவைத் தேடியடையவேண்டும்.

तस्मै स विद्वानुपसन्नाय सम्यक्
प्रशान्तचित्ताय शमान्विताय ।
येनाक्षरं पुरुषं वेद सत्यं
प्रोवाच तां तावतो ब्रह्मविद्याम् ॥ १८ ॥

தஸ்மை ஸ வித்வானுபஸந்நாய ஸம்யக்
ப்ரஶாந்தசித்தாய ஶமான்விதாய ।
யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் ॥

தன்னைத் தக்க முறையில் அணுகியவனும், சாந்த சித்தமுடையவனும், கருவி கரணங்களடங்கியவனும் ஆகிய அவனுக்கு அந்த ஞான குரு எதனால் சத்தியமும் அட்சரமும் ஆன பரம புருஷனை அவன் அறிவானோ அந்த பிரம்ம ஞானத்தை உள்ளபடி உணர்த்துவார்.

प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥ १९ ॥

ப்ரணவோதனு: ஶரோஹ்யாத்மா
ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே ।
அப்ரமத்தேன வேத்தவ்யம்
ஶரவத் தன்மயோ பவேத் ॥ 19 ॥

பிரணவமெனும் ஓம்காரமே வில்; ஆன்மாவே அம்பு; பிரம்மமே அதன் குறி; கவனக் குறைவின்றி (குறி) எய்யப்படவேண்டும். அதன் பின் அம்பைப்போல் லட்சியத்துடன் ஒன்றிய நிலை தோன்றும்.

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥ २० ॥

பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்
சித்யந்தே ஸர்வஸம்ஶயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி
தஸ்மின்த்ருஷ்டே பராவரே ॥ 20 ॥

அந்தப் பராபரமான வஸ்து பார்க்கப்பட்டதும் இவனுடைய இருதய முடிச்சு அவிழ்கிறது; ஐயங்களெல்லாம் அகலுகின்றன; கருமங்களெல்லாம் அழிகின்றன.

ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म
पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण ।
अधश्चोर्ध्वं च प्रसृतं
ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥ ॥ २१ ॥

ப்ரஹ்மைவேதமம்ருதம் புரஸ்தாத்ப்ரஹ்ம
பஶ்சாத்ப்ரஹ்ம தக்ஷிணதஶ்சோத்தரேண ।
அதஶ்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம்
ப்ரஹ்மைவேதம் விஶ்வமிதம் வரிஷ்டம் ॥ 21 ॥

இந்த அவிஞசியான பிரம்மமே நமக்கு முன்னும், பின்னும் வலத்திலும், இடத்திலும், கீழேயும், மேலேயும் எங்கும் பரந்துள்ளது. இப்பிரம்மமே விச்வம் (சிருஷ்டி); அனைத்திலும் சிறந்தது.

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा
सम्यग्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम् ।
अन्तः शरीरे ज्योतिर्मयो हि शुभ्रो
यं पश्यन्ति यतयः क्षीणदोषाः ॥ २२ ॥

ஸத்யேன லம்ப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக்ஜ்ஞானேன ப்ரஹ்மசர்யேண நித்யம் ।
அந்த: ஶரீரே ஜ்யோதிர்மயோ ஹி ஶுப்ரோ
யம் பஶ்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥ 22 ॥

இந்த ஆன்மா எப்பொழுதும் சத்தியம், தவம், தெளிந்த ஞானம், பிரம்மசரியம் ஆகியவற்றினல் எய்தப் பெறும். பாவ மற்றவராய், தளராது முயலுவோர், களங்க மற்று ஜோதி மயமாய் விளங்கும் இதைத் தம் உள்ளத்தே காண்பர்.

सत्यमेव जयते नानृतं
सत्येन पन्था विततो देवयानः ।
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा
यत्र तत्सत्यस्य परमं निधानम् ॥ २३ ॥

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்
ஸத்யேன பந்தா விததோ தேவயான: ।
யேநாக்ரமந்தி ருஷயோ ஹ்யாப்தகாமா
யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதானம் ॥ 23 ॥

சத்தியமே வெல்லும், பொய்யல்ல. எவ்வழியே நிறைவேறிய விருப்பமுள்ள ரிஷிகள் செல்லுகின்றூர்களோ, எங்கே அச் சத்தியத்தின் எல்லை நிலமிருக்கிறதோ, எது தேவ மார்க்கமோ, அதற்கு சத்தியமே வாயிலாயுள்ளது.

नायमात्मा प्रवचनेन लभ्यो
न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्य-
स्तस्यैष आत्मा विवृणुते तनूँ स्वाम् ॥ २४ ॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ஶ்ருதேன ।
யமே வைஷ வ்ருணுதே தேந லப்ய
ஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூँ
[ஸ்வாம் ॥

இந்த ஆன்மா வேதங்களைக் கற்றதாலோ, நுண்ணறிவினுலோ, விரிந்த கேள்வியாலோ அடையப்படுவதன்று; சாதகன் ஆன்மா ஒன்றையே ஆன்மாவினுல் கோரும் பொழுது இது அடையப்படும்; அவனுக்கு அப்போது இந்த ஆன்மா தன் உண்மை உருவைக் காட்டும்.

नायमात्मा बलहीनेन लभ्यो
नच प्रमादात्तपसो वाप्यलिंगात् ।
एतैरुपायैर्यतते यस्तु विद्वां-
स्तस्यैष आत्मा विशते ब्रह्मधाम ॥ २५ ॥

நாயமாத்மா பலஹீனேன லப்யோ
நச ப்ரமாதாத் தபஸோ வாப்ய லிங்காத் ।
ஏதைருபாயைர் யததே யஸ்து வித்வாம்-
ஸ்தஸ்யைஷ ஆத்மா விஶதே ப்ரஹ்மதாம ॥

இந்த ஆன்மா பலவீனனால் அடையமுடியாதது. உலக ஆசையை விட்டுவிட்டோம் என்ற பிரமையினாலோ, ஆசைகள் நீங்காத தவத்தாலோ இந்த ஆன்மாவை அடையமுடியாது. ஆனால் ஞானி இவ்வுபாயங்களைக் கைக்கொண்டு முயற்சித்தால் அவன் இருதயத்தில் இந்த ஆன்மா புகுந்து விளங்கும்.

सम्प्राप्यैनमृषयो ज्ञानतृप्ताः
कृतात्मानो वीतरागाः प्रशान्ताः ।
ते सर्वगं सर्वतः प्राप्य धीरा
युक्तात्मानः सर्वमेवाविशन्ति ॥ २६ ॥

ஸம்ப்ராப்யைனம் ருஷயோ ஜ்ஞானத்ருப்தா:
க்ருதாத்மானோ வீதராகா: ப்ரஶாந்தா: ।
தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீரா
யுக்தாத்மான: ஸர்வமேவா விசந்தி ॥ 26 ॥

இவ்வான்மாவை அடைந்த ரிஷிகள், ஆன்ம ஞானத்திலேயே திருப்தி யெய்தியவராய், ஆன்ம சொரூபிகளாய், பற்றற்றவராய், பரமசாந்தராய், புலன்களையடக்கியவராய் தீரராய் எங்கும் நிறைந்த பரம்பொருளை எங்குங்

கண்டு எல்லாமாய் விளங்கும் அவ்வான்மப் பொருளில் இரண்டறக் கலக்கின்றனர்கள்.

वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः
संन्यासयोगाद्यतयः शुद्धसत्त्वाः ।
ते ब्रह्मलोकेषु परान्तकाले
परामृताः परिमुच्यन्ति सर्वे ॥ २७ ॥

வேதாந்த விஜ்ஞான ஸுநிஶ்சிதார்த்தா:
ஸந்யாஸ யோகாத்யதய: சுத்தஸத்வா: ।
தே ப்ரஹ்ம லோகேது பராந்தகாலே
பரா ம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே ॥ 27 ॥

வேதாந்த, இயற்கை ஞானத்தின் பயனாய் ஆன்ம சாக்ஷாத்காரத்தில் உறுதி எய்தியவர்கள், சந்நியாச-யோகத்தால் தூய சித்தம் படைத்தவர்களாய் ஜீவன் முக்தர்களாகவே வாழ்ந்து பற்றனைத்தினின்றும் அறவே விடுபட்டு இறுதிக் காலத்தில் எங்கும் நிறைந்த பிரம்மத்தில் இலயிக்கின்றனர்.

यथा नद्यः स्यन्दमानाः समुद्रे-
ऽस्तं गच्छन्ति नामरूपे विहाय ।
तथा विद्वान्नामरूपाद्विमुक्तः
परात्परं पुरुषमुपैति दिव्यम् ॥ २८ ॥

யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே
அஸ்தங்கச்சந்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வான் நாமரூபாத்விமுக்த:
பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥ 28 ॥

பெருகியோடும் ஆறுகள் தம் பெயர்களையும், உருவங்களையும் துறந்து கடலில் கலந்து மறைவதுபோலும்,

ஞானி நாம ரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்தவைகளுள் உயர்ந்த தேஜோமயமான பரம்பொருளில் கலக்கிறான்.

स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति
नास्याब्रह्मवित्कुले भवति ।
तरति शोकं, तरति पाप्मानं
गुहाग्रन्थिभ्यो विमुक्तोऽमृतो भवति ॥ २९ ॥

ஸயோஹவை தத்பரமம் ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி
நாஸ்யா ப்ரஹ்ம வித்குலே பவதி ।
தரதி ஶோகம், தரதி பாப்மானம்
குஹாக்ரந்திப்யோ விமுக்தோऽம்ருதோ பவதி ॥

அந்தச் சிறந்த பிரம்மத்தை அறிபவன் பிரம்மமே ஆகிறான்; அவன் குலத்தில் பிரம்ம ஞானமற்றவனே பிறவான்; அவன் துன்பத்தையும் பாவத்தையும் கடந்து இருதய முடிச்சுகளினின்றும் விடுபட்டுச் சாகா நிலை எய்து கிறான்.

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ।
आनन्दं ब्रह्मणो विद्वान्
न बिभेति कदाचन ॥
एतं हि वाव न तपति किमहं साधु नाकरवम् ।
किमहं पापमकरवमिति ॥ ३० ॥

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ ।
'ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்
ந பிபேதி கதாசன ॥
ஏதம் ஹி வாவ ந தபதி கிமஹம் ஸாது நாகரவம் ।
கிமஹம் பாபம கரவமிதி ॥ 30 ॥

எதை எட்டிப்பிடிக்க முடியாது வாய்ச் சொற்களும் மனமும் திரும்பிவிடுகின்றனவோ அந்த பிரம்மானந்தத்தை யறிந்தவன் அஞ்சுவதில்லை. ஏனெனில் "நான் நன்மை செய்திலேனே, தீமை செய்தேனே!" என்ற கழிவிரக்கம் அவனைவருத்துவதில்லை.

युवा स्यात्साधु युवाध्यायकः
आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः ।
तस्येयं पृथिवी सर्ववित्तस्य पूर्णा स्यात् ॥ 31 ॥

யுவாஸ்யாத்ஸாது யுவாத்யாயக:
ஆஶிஷ்டோ த்ரிடிஷ்டோ பலிஷ்ட: ।
தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வ வித்தஸ்ய பூர்ணு ஸ்யாத் ॥

வாலிபன் நன்னடத்தையும், மிகுந்த பயிற்சியும், நன்னம்பிக்கையும், மன உறுதியும், உடற்கட்டுமுள்ள வனுகுக! அவனுக்கு இவ்வுலகெங்கும் செல்வம் கொழிக்கும்.

अनृत्तदर्शी। सभाः समाजांश्चागन्ता। अजनवादशीलः। रहः शीलः। गुरोरुदाचारेष्वकर्ता स्वैरिकर्माणि। स्त्रीषु यावदर्थसंभाषी। मृदुः। शान्तः। ह्रीमान्। दृढधृतिः। अग्लास्नुः। अक्रोधनः। अनसूयः। सायंप्रातरुदकुम्भमाहरेत्। अरण्यादेधानाहृत्याधो निदध्यात्।

அந்ருத்ததர்ஶீ। ஸபா: ஸமாஜாம்ஶ்சாகந்தா। அஜனவாத ஶீல:। ரஹ: ஶீல:। குரோருதாசாரேஷ் வகர்தாஸ்வைரிகர்மாணி। ஸ்த்ரீஷு யாவதர்த்த ஸம் பாஷீ। ம்ருது:। ஶாந்த:। ஹ்ரீமான்। த்ருடத்ருதி:। அக்லாஸ்னு:। அக்ரோதன:। அனஸூய:। ஸாயம்ப்ராதருத கும்பமாஹரேத்। அரண்யாதேதாஹ ஹ்ருத்யாதோ நிதத்யாத் ॥ 32 ॥

அவன் நாட்டியம் முதலியன பாராதிருக்க; கூட்டங்களுக்கும் ஜனத்திரளினுள்ளும் போகாதிருக்க; பிறரைப் பற்றி வம்பு பேசும் பழக்கம் அவனுக்கு ஆகாது; தனிமையில் அவனுக்கு இன்பம் தோன்றவேண்டும். ஆசிரியரும் உறவினரும் மனம்போனவாறு நடந்த போதிலும் அவன் தன் மனம்போன போக்கெல்லாம் போகலாகாது; பெண்களுடன் காரியமான பேச்சோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அவன் மிருதுத்தன்மையும், மனவமைதியும், நாணமும், திடசித்தமும் பெற்றிருக்கவேண்டும்; சோம்பல், வெகுளி, அழுக்காறு ஆகியவற்றை அகற்றவேண்டும். காலையும் மாலையும் ஆசிரியர் வீட்டிற்குக் குடத்தில் நீர் கொணர்ந்து கொடுக்கவும், காட்டிலிருந்து விறகு கொணர்ந்து தரவும் வேண்டும்.

बलं वाव विज्ञानाद्भूयोऽपि ह शतं विज्ञानवतामेको बलवानाकम्पयते। स यदा बली भवत्यथोत्थाता भवत्युत्तिष्ठन्परिचरिता भवति, परिचरन्नुपसत्ता भवत्युपसीदन्द्रष्टा भवति, श्रोता भवति, मन्ता भवति, बोद्धा भवति, कर्ता भवति, विज्ञाता भवति ॥ ३३ ॥

பலம் வாவ விஜ்ஞானாத் பூயோऽபி ஹ ஶதம் விஜ்ஞானவதா மேகோ பலவா னாகம்பயதே। ஸ யதா பலீ பவத்ய தோத்தாதா பவத்யுத்திஷ்டன்பரி சரிதா பவதி, பரிசரன்னு பஸத்தா பவத்யுபஸீ தந்த்ரஷ்டா பவதி, ஶ்ரோதா பவதி, மந்தா பவதி, போத்தா பவதி, கர்த்தா பவதி, விஜ்ஞாதா பவதி ॥ 33 ॥

ஆன்ம பலம் விஞ்ஞானத்தைக் காட்டிலும் பெரிது. ஒரு பலவான் நூறு விஞ்ஞானவான்களை ஆட்டிவைக்கக் கூடும். ஒருவனுக்கு பலம் வந்தால் அவன் எழுவான்; எழுந்து குருவுக்கு சேவை செய்வான்; சேவை செய்து குருவிடம் நெருங்கத் தகுதிபெறுவான். நெருங்கி வாழ்வ

தால் குருவின் கருத்தை உணருவான்; அவர் உபதேசங்களைக் கேட்டு, அவற்றை மனனம் செய்வான்; செயலாற்றலால் அறியாமை நீங்கப் பேரறிவு பெறுவான்.

मधु वाता ऋतायते। मधुक्षरन्ति सिन्धवः। माध्वीर्नः सन्त्वोषधीः। मधु नक्तमुतोषसः। मधुमत्पार्थिवं रजः। मधु द्यौरस्तु नः पिता। मधुमान्नो वनस्पतिः। मधुमानस्तु सूर्यः। माध्वीर्गावो भवन्तु नः॥

மதுவாதா ருதாயதே। மது க்ஷரந்தி ஸிந்தவ:। மாத் வீர்ன: ஸந்த்வோஷதீ:। மது நக்த முதோஷஸ:। மதுமத்பார்த்திவம் ரஜ:। மது த்யௌரஸ்து ன: பிதா। மது மான்னோ வனஸ்பதி:। மதுமானஸ்து ஸூர்ய:। மாத்வீர் காவோ பவந்து ந: ॥ 34 ॥

(சத்திய சோதனை புரியும் நமக்கு) காற்று அனுகூலமாய் வீசுக; ஆறுகள் இனிய நீரை அளிக்க; எல்லாச் செடி கொடிகளும் இனிமை பயப்பதாக; இரவும் காலையும் மாலையும் இன்பமளிப்பதாக; தந்தையை யொக்க வானம் ஆசி வழங்குக; மரங்கள் இனிய கனிகளைத் தருக; சூரியன் நன்மை புரிக; பசுக்கள் இனிய பாலைத் தருக!

न जातु कामान्न भयान्न लोभात्
धर्मं त्यजेत् जीवितस्यापि हेतोः।
धर्मो नित्यः सुखदुःखे त्वनित्ये
जीवो नित्यो हेतुरस्य त्वनित्यः॥ ३५॥

ந ஜாது காமான்ன பயான்ன லோபாத்
தர்மம் த்யஜேத் ஜீவிதஸ்யாபி ஹேதோ:।
தர்மோ நித்ய: ஸுகதுக்கேத் வநித்யே
ஜீவோ நித்யோ ஹேதுரஸ்ய த்வநித்ய: ॥ 35 ॥

தன் ஆசை நிறைவேறும் பொருட்டோ, அச்சத்தினுலோ, பேராசையினுலோ—தன்னுயிரைக் காக்கும் கருத்தினுலும்கூட—தர்மத்தைத் துறத்தல் கூடாது. ஏனெனில் தர்மம் அழியாதது; இன்ப துன்பங்கள் அற்பாயுளுள்ளவை. ஆன்மா அழிவற்றது; அதைக் கட்டினுளிடும் உடல் அழிந்து போவது.

यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा
तदेव वीर्यवत्तरं भवति ॥ ३६ ॥

யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா
ததேவ வீர்ய வத்தரம் பவதி ॥ 36 ॥

தத்துவ அறிவுடனும், சிரத்தையுடனும், பக்தியுடனும் செய்யப்படும் காரியம் மிக்க திறம் பெற்று விளங்கும்.

ஓர் சிறு குழந்தை எவ்வாறு தன் தாயினிடம் நடந்து கொள்ளுமோ அதேமாதிரி பகவானிடத்தில் திட நம்பிக்கையோடு நான் வாழ்கின்றேன். நானிருப்பது உண்மையானுல் என்னைப் படைத்த பகவானும் இருக்கிருர் என்பது எனக்கு உறுதி. உலகில் கோடிக்கணக்கானவர்களுக்கும் இதேமாதிரி உறுதி உண்டு. பகவானை வர்ணிக்கவோ, அவரது அனந்த கல்யாண குணங்களை விவரிக்கவோ எல்லோராலும் முடியாமலிருக்கலாம். ஆனுல் அவர்களுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினுல் பகவத் பக்தி அதில் ஊடுருவி ஓடுவதை அவர்களின் ஒவ்வொரு செய்கையிலும் காணலாம்.

கடவுளை நம்புவோர் பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை அத்யாவசியம். நமது வாழ்க்கை முழுதுமே பிரார்த்தனை. அவ்வப்போது பகவத் பக்தியை அதிகமாக்கிக் கொள்வதற்காகவே குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விதத்தில் பெரியோர் பிரார்த்தனை செய்து வந்தனர். பிரார்த்தனையினுல் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகின்றேன். —காந்திஜி.

மாலைப் பிரார்த்தனை

यं ब्रह्मावरुणेन्द्ररुद्रमरुत: स्तुन्वन्ति दिव्यै: स्तवै-
र्वेदै: सांगपदक्रमोपनिषदैर्गायन्ति यं सामगा: ।
ध्यानावस्थिततद्गतेन मनसा पश्यन्ति यं योगिनो
यस्यान्तं न विदु: सुरासुरगणा देवाय तस्मै नम: ॥

யம் ப்ரஹ்மா வருணேந்த்ர ருத்ர மருத:
ஸ்துன்வந்தி திவ்யை: ஸ்தவை:
வேதை: ஸாங்கபதக்ரமோ பநிஷதை:
காயந்தி யம் ஸாமகா: ।
த்யானவஸ்தித தத்கதேன மனஸா
பஶ்யந்தி யம் யோகின:
யஸ்யாந்தம் நவிது: ஸுரா ஸுரகண
தேவாய தஸ்மை நம: ॥

பிரம்மா, வருணன், இந்திரன், உருத்திரன், மருத்து முதலியவர்கள் எவரை தெய்வீகப் பாடல்களால் துதித்துக் கொண்டிருக்கிறார்களோ, அங்கம், பதம், கிரமம், உபநிடதங்களுடன் ஸாமகானத்தில் வல்ல ரிஷிகள் எவரை எப்பொழுதும் இனிமையாய்ப் புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கிறார்களோ, சமாதியில் அமர்ந்து யோகிகள் பரம்பொருளிடத்தில் லயித்த மனத்தில் எவரை தரிசிக்கிறார்களோ, எவரது மகிமைக்கு தேவரும் அசுரரும் எல்லையைக் காண இயலவில்லையோ, அந்த தேவனை வணங்குகிறேன்.

இப்போது கோடிக்கணக்கான இந்துக்களும் முஸல்மான்களும், கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை செய்தே கவலையை நீக்கிக் கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்களென்றும், ஏமாந்தவர்களென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்தப் 'பொய்'தான் எனது உயிருக்கு இன்றியமையாததாய் இருக்கிறது. சத்திய உபாசகனான எனக்கு உயிர்போன்றுள்ள பிரார்த்தனை பொய் ஆகுமா?

—காந்திஜி.

अर्जुन उवाच—

स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥५४॥

அர்ஜுன உவாச—

ஸ்திதப்ரக்ஞஸ்ய காபாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ।
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேதகிம் ॥ 54 ॥

அர்ஜுனன் கூறியது :—

(கேசவ) கேசவா! (ஸ்திதப்ரஜ்ஞஸ்ய) ஞானம் நிலைத்து (ஸமாதிஸ்தஸ்ய) ஸமாதியில் நிற்பவனுடைய (பாஷா) வர்ணனை (கா) என்ன? (ஸ்திததீ:) அந்த ஸ்திதப்ரக்ஞன் (கிம்ப்ரபாஷேத) எவ்வாறு பேசுவான்? (கிமாஸீத) எப்படி இருப்பான்? (கிம்வ்ரஜேத) எங்ஙனம் நடப்பான்?

श्रीभगवानुवाच—

प्रजहाति यदा कामान् सर्वान्पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥ ५५ ॥

ஸ்ரீ பகவான் உவாச—

ப்ரஜஹாதி யதா காமான்
ஸர்வான் பார்த்த மனோகதான்।
ஆத்மன்யேவாத்மனா துஷ்ட:
ஸ்தித ப்ரஜ்ஞ: ததோச்யதே ॥ 55 ॥

ஸ்ரீ பகவான் கூறியது :—

(பார்த்த) பார்த்தா! (யதா) எப்பொழுது (மனோகதான்) மனத்திலடங்கிய (காமான்) ஆசைகள் (ஸர்வான்) அனைத்தையும் (ப்ரஜஹாதி) தூரத் தள்ளுகின்றானோ,

(ஆத்மனிஏவ) ஆத்மாவினிடத்திலேயே (ஆத்மஞ) ஆத்மாவிஞல் (துஷ்ட:) உள் மகிழ்ச்சி நிறைந்த அவன் (ததா) அப்பொழுது (ஸ்திதப்ரஜ்ஞ:) ஸ்திதப் பிரக்ஞன் என்று (உச்யதே) சொல்லப்படுகிருன்.

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥ ५६ ॥

து:கேஷு அனுத்விக்னமஞ:
ஸுகேஷு விகதஸ்ப்ருஹ: ।
வீதராக பயக்ரோத:
ஸ்திததீ: முனிருச்யதே ॥ 56 ॥

(து:க்கேஷு) துன்பத்தில் (அனுத்விக்னமஞ:) துடியாத மனத்தினஞய் (ஸுகேஷு) இன்பத்தில் (விகதஸ்ப்ருஹ:) ஆசை எழாதவஞய் (வீதராக பயக்ரோத:) விருப்பம், பயம், கோபம் இல்லாதவஞய் இருப்பவனே (ஸ்திததீ:) ஞானம் நிலைபெற்ற (முனி:) முனிவன் என (உச்யதே) சொல்லப்படுகிருன்.

यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥

ய: ஸர்வத்ரான் அபிஸ்னேஹ:
தத்தத் ப்ராப்ய ஶுபாஶுபம் ।
நாபிநந்ததி நத்வேஷ்டி
தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 57 ॥

(ய:) எவன் (ஸர்வத்ர) எல்லா இடத்திலும் (அனபிஸ்நேஹ:) பற்றில்லாதவஞய் (தத்தத்) அந்தந்த (ஶுபாஶுபம்) நன்மை தீமைகளை (ப்ராப்ய) அடைந்து (நஅபி நந்ததி) சந்தோஷத்தால் பூரிப்பதில்லையோ (நத் வேஷ்டி) துக்கத்தால் வெறுப்பதில்லையோ (தஸ்ய) அவனுடைய

(ப்ரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) உறுதியாய் நிலை பெற்றதாகும்.

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८ ॥

யதா ஸம்ஹரதே சாயம்
கூர்மோங்கானீவ ஸர்வஶ: ।
இந்த்ரியாணீந்த்ரி யார்த் தேப்ய:
தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 58 ॥

(யதா) எப்பொழுது (ச) மேலும் (அயம்) இந்த யோகி (கூர்ம:) ஆமையானது (அங்கானி இவ) தன் அங்கங்களைச் செய்வது போல (இந்த்ரியாணி) புலன்களை (இந்த்ரியார்த்தேப்ய:) இந்திரிய விஷயங்களினின்று (ஸர்வஶ:) எல்லா வகையிலும் (ஸம் ஹரதே) உள்ளே இழுத்துக் கொள்ளுகின்றானோ (தஸ்ய) அவனுடைய (பிரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) உறுதியாக நிலை பெற்றதாகும்.

विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥

விஷயா விநிவர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹின: ।
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥ 59 ॥

(நிராஹாரஸ்ய தேஹின:) உணவை ஒழித்தவனுக்கு (விஷயா:) பொருள்கள் (விநிவர்த் தந்தே) ஒழிவடைகின்றன—(ரஸவர்ஜம்) ருசி ஒன்று நீங்கலாக; (ரஸ: அபி) ருசியும் (பரம்) பரம்பொருளை (த்ருஷ்ட்வா) கண்டதன் பின் (அஸ்ய) இவனுக்கு (நிவர்த்ததே) ஒழிவடைகிறது.

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ६० ॥

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித: ।
இந்த்ரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன: ॥

(கௌந்தேய) குந்தியின் மகனே ! (யதத:) முயற்சி யுடையவனும் (விபஸ்சித:) நல்லறிவுடையவனும் ஆகிய (புருஷஸ்ய அபி) புருஷனிடத்தும் (ப்ரமாதீனி) கலங்கச் செய்யும் (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (ப்ரஸபம்) பலாத் காரமாய் (மன:) மனத்தை (ஹரந்தி) இழுத்துச் செல்லு கின்றன (ஹி) அன்றோ ?

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥

தானி ஸர்வாணி ஸம்யம்ய
யுக்த ஆஸீத மத்பர: ।
வஶேஹி யஸ் யேந்த்ரியாணி
தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 61 ॥

(யுக்த:) நிலைபெற்ற மனத்தினன் (தானி) அவை (ஸர்வாணி) யாவற்றையும் (ஸம்யம்ய) செவ்வனே அடக்கி (மத்பர:) என்னையே உயர்ப்பொருளாய்க் கருதி (ஆஸீத) அமைவுற இருக்கவேண்டும் (யஸ்ய) எவனுடைய (இந்த்ரி யாணி) இந்திரியங்கள் (வஶே) தன் வசப்பட்டனவோ (தஸ்ய) அவனுடைய (ப்ரஜ்ஞாஹி) ஞானமே (ப்ரதிஷ்டி தா) உறுதியானது.

ध्यायतो विषयान्पुंसः संगस्तेषूपजायते ।
संगात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ ६२ ॥

த்யாயதோ விஷயான் பும்ஸ:
ஸங்கஸ் தேஷூப ஜாயதே ।
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோபி ஜாயதே ॥ 62 ॥

(விஷயான்) பொருள்களை (த்யாயத:) உற்று நினைக்கின்ற (பும்ஸ:) புருஷனுக்கு (தேஷு) அவற்றினிடம் (ஸங்க:) பற்று (உபஜாயதே) உண்டாகின்றது; (ஸங்காத்) பற்றினின்று (காம:) ஆசை (ஸஞ்ஜாயதே) தோன்றுகின்றது; (காமாத்) ஆசையினின்று (க்ரோத:) கோபம் (அபிஜாயதே) பிறக்கின்றது.

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद् बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ ६३ ॥

க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்மிருதி விப்ரம: ।
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாச:
புத்தி நாசாத் ப்ரணச்யதி ॥ 63 ॥

(க்ரோதாத்) கோபத்தினின்று (ஸம் மோஹ:) பெரு மோகம் (பவதி) உண்டாகின்றது; (ஸம் மோஹாத்) பெரு மோகத்தினின்று (ஸம்ருதி விப்ரம):) நன்னினைவின் கேடு விளைகின்றது (ஸம்ருதி ப்ரம்சாத்) நன்னினைவு கெட்டதனால் (புத்தி நாச:) புத்தி நாசம் ஏற்படுகின்றது; (புத்தி நாசாத்) புத்தி நாசத்தினால் (ப்ரணச்யதி) முற்றும் அழிகின்றான்.

रागद्वेषवियुक्तैस्तु विषानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ६४ ॥

ராக த்வேஷ வியுக்தைஸ்து
விஷயான் இந்த்ரியைச் சரன் ।
ஆத்ம வச்யை: விதேயாத்மா
ப்ரஸாத மதிகச்சதி ॥ 64 ॥

(து) ஆனால் (ராகத் வேஷவியுக்தை:) விருப்பு வெறுப்பற்றவையும் (ஆத்மவச்யை:) தன்வயமானவையும்

ஆகிய (இந்த்ரியை:) இந்திரியங்களால் (விஷயான்) பொருள்களை (சரன்) அனுபவித்துக்கொண்டு (விதேயாத்மா) தன்னடக்கம் பெற்றவன் (ப்ரஸாதம்) உள்ளத் தெளிவை (அதிகச்சதி) எய்துகின்றான்.

प्रसादे सर्वदु:खानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥

ப்ராஸாதே ஸர்வ துக்காநும்
ஹானிரஸ்யோப ஜாயதே ।
ப்ரஸன்ன சேதஸோ ஹ்யாசு
புத்தி: பர்யவதிஷ்டதே ॥ 65 ॥

(ப்ரஸாதே) உள்ளத் தெளிவில் (அஸ்ய) இவனுடைய (ஸர்வ து:க்காநும்) எல்லாத் துன்பங்களுக்கும் (ஹானி:) அழிவு (உபஜாயதே) ஏற்படுகின்றது; (ப்ரஸன்னசேதஸ:) தெளிந்த மனமுடையவனுக்கு (ஆசு) சீக்கிரத்தில் (புத்தி:) புத்தி (பர்யவதிஷ்டதே ஹி) தடுமாற்றமின்றி நன்கு நிலை பெறுகின்றது.

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥ ६६ ॥

நாஸ்தி புத்தி ரயுக்தஸ்ய நசா யுக்தஸ்ய பாவனு ।
நசா பாவயத: சாந்தி: அசாந்தஸ்ய குத: ஸுகம் ॥66॥

(அயுக்தஸ்ய) நிலைபெறாதவனுக்கு (புத்தி:) விவேகம் (நாஸ்தி) இல்லை; (அயுக்தஸ்ய) நிலைபெறாதவனுக்கு (பாவனுச) ஆன்ம சிந்தையும் (ந) இல்லை; (ச) மேலும் (அபாவயத:) ஆன்ம சிந்தையில்லாதவனுக்கு (சாந்தி:) மனவமைதி (ந) இல்லை; (அசாந்தஸ்ய) மனவமைதி இல்லாதவனுக்கு (ஸுகம்) இன்பம் (குத:) எங்ஙனம்?

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि ॥ ६७ ॥

இந்த்ரியாணும் ஹி சரதாம் யன் மனோऽனு விதீயதே ।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர் நாவ மிவாம்பஸி ॥

(ஹி) ஏனெனில் (சரதாம்) அலேகின்ற (இந்த்ரியாணும்) இந்திரியங்களுக்கு (யத்) எந்த (மன:) மனம் (அனுவிதீயதே) அனுகூலமாய்ப் பின் செல்கின்றதோ (தத்) அது (அஸ்ய) இவனுடைய (ப்ரஜ்ஞாம்) விவேகத்தை (வாயு:) காற்ருனது (அம்பஸி) நீரின்மேல் (நாவம் இவ) படகைப்போல் (ஹரதி) கவர்ந்து செல்கின்றது.

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
अिन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥

தஸ்மாத் யஸ்ய மஹாபாஹோ
நிக்ருஹீதானி ஸர்வஶ: ।
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய:
தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 68 ॥

(தஸ்மாத்) ஆகையால் (மஹாபாஹோ) தோள்வலி படைத்தவனே! (யஸ்ய) எவனுடைய (இந்த்ரியார்த்தேப்ய:) இந்திரிய விஷயங்களினின்று (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (ஸர்வஶ:) முற்றும் (நிக்ருஹீதானி) அடக்கப் பெற்றனவோ (தஸ்ய) அவனுடைய (பிரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) நிலேபெற்றது.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ ६९ ॥

யாநிஶா ஸர்வ பூதானும்
தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி
ஸாநிஶா பஶ்யதோ முனே: ॥ 69 ॥

(ஸர்வ பூதாநும்) எல்லாப் பிராணிகளுக்கும் (யா) எது (நிஶா) இரவோ, (தஸ்யாம்) அதில் (ஸம்யமீ) மன மடங்கிய முனிவன் (ஜாக்ரதி) விழிப்புடையவனுயிருக் கிறுன். (யஸ்யாம்) எதில் (பூதானி) பிராணிகள் (ஜாக்ரதி) விழிப்புடையனவோ, (ஸா) அது (பஶ்யத:) உண்மையைக் காணும் (முனே:) முனிவனுக்கு (நிஶா) இரவாம்.

आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥ ७० ॥

ஆபூர்யமாண மசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிஶந்தி யத்வத் ॥
தத்வத் காமா யம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸ ஶாந்தி மாப்னோதி ந காமகாமீ ॥ 70 ॥

(ஆபூர்ய மாணம்) எங்கும் நிரம்பியதும் (அசலப்ர திஷ்டம்) நிலை குலையாததுமாகிய (ஸமுத்ரம்) ஸமுத் திரத்தை (ஆப:) நதிகள் (யத்வத்) எவ்வாறு (ப்ரவிஶந்தி) அடைகின்றனவோ (தத்வத்) அவ்வாறு (ஸர்வே காமா:) ஆசைகளெல்லாம் (யம்) எவனை (ப்ரவிஶந்தி) அடைகின் றனவோ (ஸ:) அவன் (ஶாந்திம்) அமைதியை (ஆப் னோதி) எய்துகிறுன்; (காமகாமீ) ஆசைகளைத் தொடர் பவன் (ந) எய்தான்.

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निः स्पृहः ।
निर्ममो निरहंकारः स शान्तिमधिगच्छति ॥ ७१ ॥

விஹாய காமான்ய: ஸர்வான்
புமான் சரதி நிஸ்ப்ருஹ: ।
நிர்மமோ நிரஹங்கார:
ஸ ஶாந்திமதி கச்சதி ॥ 71 ॥

(ய:) எந்த (புமான்) புருஷன் (ஸர்வான் காமான்) எல்லா ஆசைகளையும் (விஹாய) விட்டு (நிஸ்ப்ருஹ:) பற்றில்லாதவனாய் (நிர ஹங்கார: நிர்மம:) ‘ நான் ’ ‘எனது’ என்பதில்லாதவனாய் (சரதி) சஞ்சரிக்கின்றானோ (ஸ:) அவன் (ஶாந்திம்) அமைதியை (அதிகச்சதி) எய்துகிறான்.

ऐषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥ ७२ ॥

ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த்த
நைனாம் ப்ராப்ய விமுஹ்யதி ।
ஸ்தித்வா ஸ்யாமந்த காலேபி
ப்ரஹ்ம நிர்வாண ம்ருச்சதி ॥ 72 ॥

(பார்த்த) பார்த்தா! (ஏஷா) இதுவே (ப்ராஹ்மீ ஸதிதி:) பிரம்மத்துடன் ஒன்றுபட்ட நிலை ; (ஏனாம்) இதை (ப்ராப்ய) அடைந்து (நவிமுஹ்யதி) ஒருவன் மோகத்தில் அழுந்தமாட்டான். (அந்த காலேஅபி) கடைசி காலத்திலும் (அஸ்யாம்) இதில் (ஸ்தித்வா) நின்று (ப்ரஹ்ம நிர்வாணம்) ப்ரஹ்மத்தில் கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையை (ருச்சதி) அடைகிறான்.

* * * *

मूकं करोति वाचालं पंगुं लंघयते गिरिम् ।
यत्कृपा तमहं वन्दे परमानन्दमाधवम् ॥

மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் ।
யத்க்ருபா தமஹம் வந்தே பரமாநந்த மாதவம் ॥

எந்தப் பேரானந்தவாரிதியான மாதவனுடைய கருணையினால் ஊமைக்குப் பேசவும் முடவனுக்கு மலையைத் தாண்டவும் சக்தி வருமோ அவனை வணங்குகின்றேன்.

வித்தியாலயப் பிரார்த்தனை

ॐ सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्वि नावधीतमस्तु । मा विद्विषावहै । ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥ १ ॥

ஓம் ஸஹ நாவவது । ஸஹ நௌபுனக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்வி நாவதீத மஸ்து । மா வித்விஷாவஹை । ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥ 1 ॥

நம் இருவரையும் கடவுள் பாலிக்க !
நம் இருவரையும் பயன்படுத்துக !
நாம் இருவரும் வீரியமுடன் வாழ்வோம் !
நம் படிப்பெல்லாம் ஒளிபெற்றிலங்குக !
நாம் இருவரும் அழுக்காறின்றி வதிவோம்.
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி !

ॐ असतो मा सद्गमय ।
तमसो मा ज्योतिर्गमय । मृत्योर्माऽमृतं गमय ॥ २ ॥

ஓம் அஸ்தோ மா ஸத்கமய ।
தமஸோமா ஜ்யோதிர் கமய ।
ம்ருத்யோர் மாऽம்ருதம் கமய ॥ 2 ॥

ஆண்டவனே, என்னைப் பொய்யினின்றும் உண்மைக்கு அழைத்துச் செல். இருளினின்றும் ஒளிக்கு அழைத்தேகு. சாவினின்றும் அமர நிலைக்கு அழைத்துப்போ.

ब्रह्मार्पणं ब्रह्महविः ब्रह्माग्नौ ब्रह्मणाहुतम्
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्म समाधिना ॥ ३ ॥

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவி:
ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணாஹுதம் ।
ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம்
ப்ரஹ்மகர்ம ஸமாதினா ॥ 3 ॥

பிரம்மத்துக்கு அர்ப்பணமாக பிரம்ம அவியை பிரம்மத் தீயில் பிரம்மத்தால் ஹோமம் பண்ணுவோன், பிரம்மத்தின் செய்கையில் சமாதான மெய்தினோன், பிரம்மத்தை அடைவான்.

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्ताम्
संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥ ४ ॥

யோந்த: ப்ரவிஶ்ய மமவாச மிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவ யத்யகில ஶக்திதர: ஸ்வதாம்னா ।
அன்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத் வகாதீன்
ப்ராணான்னமோ பகவதே புருஷாய துப்யம் ॥4॥

ஏ சர்வ சக்திகளும் வாய்ந்தவனே! நீ என் உள்ளத்துள் உள்ளாய். தன் ஒளியினால் என் உறங்கும் வாக்கை எழுப்புகின்றாய். என் கைகள், கால்கள், காதுகள், தோல் முதலிய அங்கங்களில் உயிரை நிரப்புகின்றாய். ஏ பகவானே! உனக்குப் பலப்பல வணக்கங்கள்.

உணவருந்துவதைவிட பிரார்த்தனை புரிவது கோடி மடங்கு அதிகப் பயனுடைத்து. உணவை நிறுத்திவிட்ட போதிலும் பிரார்த்தனையை மட்டும் ஒருபொழுதும் நிறுத்தக்கூடாது. பிரார்த்தனை நின்றுவிடுவதனால் மனிதனுக்கு மிகுந்த வேதனை தோன்றவேண்டும். பல சமயங்களில் உணவை நிறுத்துவதனால் உடம்புக்கு நன்மை விளைகிறது. பிரார்த்தனை நின்றுவிடுவதனால் ஒருபொழுதும் நன்மை உண்டாவதற்கில்லை. —காந்திஜி.

பெண்கள் ப்ரார்த்தனை

गोविन्द द्वारिकावासिन् कृष्ण गोपीजनप्रिय ।
कौरवैः परिभूतां मां किं न जानासि केशव ॥ १ ॥

கோவிந்த த்வாரிகா வாஸின்
க்ருஷ்ண கோபீ ஜனப்ரிய ।
கௌரவை: பரிபூதாம் மாம்
கிம் ந ஜானாஸி கேசவ ॥ 1 ॥

ஏ துவாரகையில் வதியும் கோவிந்தா! ஏ கோபியரின் அன்பனான கிருஷ்ணா! கௌரவர்களால் (தீய வாசனைகளால்) சூழப்பெற்றுள்ள என்னை நீ ஏன் அறிகிறாயில்லை?

हे नाथ ! हे रमानाथ ! व्रजनाथार्तिनाशन ।
कौरवार्णवमग्नां मामुद्धरस्व जनार्दन ॥ २ ॥

ஹே நாத! ஹே ரமாநாத! வ்ரஜநாதார்த்திநாசன ।
கௌரவார்ணவ மக்நாம் மாமுத்தரஸ்வ ஜனார்தன ॥

ஏ நாதா! ஏ ரமாநாதா! வ்ரஜநாதா! துக்கத்தைத் துடைக்கும் ஜனார்தனா! கௌரவரென்ற கடலில் மூழ்குகின்றேன், என்னைக் கரையேற்று.

कृष्ण कृष्ण महायोगिन् विश्वात्मन् विश्वभावन ।
प्रपन्नां पाहि गोविन्द कुरुमध्येऽवसीदतीम् ॥ ३ ॥

க்ருஷ்ண க்ருஷ்ண மஹாயோகின்
விச்வாத்மன் விச்வபாவன ।
ப்ரபன்னாம் பாஹி கோவிந்த
குருமத்யேऽவஸீததீம் ॥ 3 ॥

ஏ விச்வான்மா! விச்வத்தைத் தோற்றுவிக்கும் மகா யோகியான கிருஷ்ணா! ஏ கோவிந்தா! கௌரவரிடையே உதவியற்றுத் தவிக்கும் நான் உன்னைச் சரணடைந்துள்ளேன், காப்பாய்!

धर्मं चरत माऽधर्मं सत्यं वदत नानृतम् ।
दीर्घं पश्यत मा ह्रस्वं परं पश्यत माऽपरम् ॥ ४ ॥

தர்மம் சரத மாऽதர்மம் ஸத்யம் வதத நாந்ருதம் ।
தீர்கம் பச்யத மா ஹ்ருஸ்வம் பரம் பச்யத மாऽபரம் ॥

தர்மத்திற் கொத்துநட, அதர்மமாயல்ல; உண்மை உரை, பொய் அல்ல; நெடிது நோக்கு, குறுகி நோக்காதே; மேலே (கடவுளை)ப் பார், கீழே (உலகை)ப் பாராதே.

अहिंसा सत्यमस्तेयं शौचमिन्द्रियनिग्रहः ।
एतं सामासिकं धर्मं चातुर्वर्ण्येऽब्रवीन्मनुः ॥ ५ ॥

அஹிம்ஸா ஸத்ய மஸ்தேயம்
ஶௌச மிந்த்ரிய நிக்ரஹ: ।
ஏதம் ஸாமாஸிகம் தர்மம்
சாதுர் வர்ண்யேऽப்ரவீன்மனு: ॥ 5 ॥

அஹிம்சை, சத்தியம், கள்ளாமை, தூய்மை, புலனடக்கம் ஆகிய இவற்றை நான்கு வர்ணங்களுக்கும் உரிய தர்மங்களென மனு சுருக்கமாய்க் கூறினர்.

अहिंसा सत्यमस्तेयमकामक्रोधलोभता
भूतप्रियहितेहा च धर्मोऽयं सार्ववर्णिकः ॥ ६ ॥

அஹிம்ஸா ஸத்ய மஸ்தேய மகாம க்ரோத லோபதா ।
பூதப்ரியஹிதேஹா ச தர்மோயம் ஸார்வ வர்ணிக: ॥

அஹிம்சை, சத்தியம், கள்ளாமை காமம், வெகுளி, பேராசை ஆகியவையின்மை; உயிர்களனைத்தும் விரும்பும்

நன்மையைச் செய்தல்—ஆகிய இவை வர்ணங்களனைத்திற்கு முரிய தர்மமாம்.

विद्वद्भिः सेवितः सद्भिर्नित्यमद्वेषरागिभिः ।
हृदयेनाभ्यनुज्ञातो यो धर्मस्तं निबोधत ॥ ७ ॥

வித்வத்பி: ஸேவித: ஸத்பிர்
நித்ய மத்வேஷ ராகிபி: ।
ஹ்ருதயே நாப்யனுஜ்ஞாதோ
யோ தர்மஸ்தம் நிபோதத ॥ 7 ॥

வித்வான்களும், மகான்களும், விருப்பு வெறுப்பற்ற பெரியோரும் எதை அனுஷ்டித்துள்ளனரோ, எதை நாம் உள்ளமார உணர்ந்திருக்கின்றோமோ அந்த தர்மத்தை நீ உணர்வாயாக.

श्रूयतां धर्मसर्वस्वं श्रुत्वा चैवावधार्यताम् ।
आत्मनः प्रतिकूलानि परेषां न समाचरेत् ॥ ८ ॥

ஶ்ரூயதாம் தர்ம ஸர்வஸ்வம்
ஶ்ருத்வா சைவாவதார்யதாம் ।
ஆத்மன: ப்ரதிகூலானி
பரேஷாம் ந ஸமாசரேத் ॥ 8 ॥

தர்மத்தின் இரகசியத்தைக் கேள்; கேட்டு இதயத்தில் பதித்துக்கொள்: உனக் கொவ்வாததென்று கருதுவதை நீ பிறர்க்குச் செய்யாதே.

श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रन्थकोटिभिः ।
परोपकारः पुण्याय पापाय परपीडनम् ॥ ९ ॥

ஶ்லோகார்தேன ப்ரவக்ஷ்யாமி
யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
பரோபகார: புண்யாய
பாபாய பரபீடனம் ॥ 9 ॥

கோடி கோடி சுலோகங்களில் கூறப்பட்டுள்ளதை நான் அரை சுலோகத்தில் சொல்லுவேன்: பிறருக்கு நன்மை புரிவதால் புண்ணியமும் தீமை புரிவதால் பாவமும் விளைகிறது.

आदित्यचन्द्रावनिलोऽनलश्च
द्यौर्भूमिरापो हृदयं यमश्च ।
अहश्च रात्रिश्च उभे च सन्ध्ये
धर्मोऽपि जानाति नरस्य वृत्तम् ॥ १० ॥

ஆதித்ய சந்த்ராவ நிலோ நலஶ்ச
த்யௌர்பூமிராபோ ஹ்ருதயம் யமஶ்ச ।
அஹஶ்ச ராத்ரிஶ்ச உபேச ஸந்த்யே
தர்மோபி ஜானுதி நரஸ்யவ்ருத்தம் ॥ 10 ॥

சூரியன், சந்திரன், வாயு, அக்னி, ஆகாயம், பூமி, நீர், உள்ளம், இயமன், பகல், இரவு, காலை, மாலை, என்ற இவை—ஏன் தர்மமே—மனிதன் நடவடிக்கைகளை அறியும். அதாவது மனிதன் தன் எந்த எண்ணத்தையும்கூட இவைகளிட மிருந்து மறைக்க இயலாது.

புத்தர், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தாம் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள்; பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும்போதும் மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை. எனது சமாதானத்தைக் கண்டு அநேகர் வியந்ததுண்டு. அந்த சமாதானம் எங்கிருந்து வருகிறது? பிரார்த்தனையிலிருந்துதான். நான் படித்தவனல்ல; நான் வெறும் பிரார்த்தனைக்காரனென்று தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன். —காந்திஜி.

பஜகோவிந்தத்திலிருந்து :—

मूढ जहीहि धनागमतृष्णां
कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम् ।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं
तेन विनोदय चित्तम् ॥ १ ॥

மூட ஜஹீஹி தனுகமத்ருஷ்ணும்
குரு ஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணும் ।
யல்லபஸே நிஜகர்மோ பாத்தம்
வித்தம் தேன விநோதய சித்தம் ॥ 1 ॥

ஏ மூடா, பணம் சேர்க்கும் ஆசையை விடு. மனத்தில் ஆசையற்ற நல்லுறுதி கொள். தன் உழைப்பினுல் கிட்டும் பொருளைக்கொண்டே மனத்தைத் திருப்தியுறச்செய்.

अर्थमनर्थं भावय नित्यं
नास्ति ततः सुखलेशः सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीतिः
सर्वत्रैषा विहिता रीतिः ॥ २ ॥

அர்த்த மனர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி தத: ஸுகலேச: ஸத்யம் ।
புத்ராதபி தனபாஜாம் பீதி:
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதி: ॥ 2 ॥

பொருள் தீமைகளுக்கெல்லாம் காரணமென்பதை எப்பொழுதும் நினைவில் வை. உண்மையில் அதில் சிறிதும் சுகமில்லை. பொருள் படைத்தவர்கள் தம் பிள்ளையிடமும் அஞ்சவேண்டி யிருக்கிறது. எங்கும் காணப்படுவது இதுவே.

कामं क्रोधं लोभं मोहं
त्यक्त्वाऽत्मानं भावय कोऽहम् ।
आत्मज्ञानविहीना मूढा
स्ते पच्यन्ते नरकनिगूढाः ॥ ३ ॥

காமம் க்ரோதம் லோபம் மோஹம்
த்யக்த்வாऽத் மானம் பாவய கோऽஹம் ।
ஆத்மஜ்ஞான விஹீனு மூடா
ஸ்தேபச்யந்தே நரகநிகூடா: ॥ 3 ॥

காமம், வெகுளி, பேராசை, மயக்கம் ஆகியவற்றை அகற்றி 'நான் யார்?' என்று எண்ணிப்பார். ஆன்ம ஞானம் பெருத மூடர்கள் நரகத்தில் வீழ்ந்து அவதிப் படுகிருர்கள்.

त्वयि मयि चान्यत्रैको विष्णुर्
व्यर्थं कुप्यसि सर्वसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मानं
सर्वत्रोत्सृज भेदाज्ञानम् ॥ ४ ॥

த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணுர்
வ்யர்த்தம் குப்யஸி ஸர்வஸஹிஷ்ணு: ।
ஸர்வஸ்மின்னபி பஶ்யாத்மானம்
ஸர்வத்ரோத் ஸ்ருஜ பேதாஜ்ஞானம் ॥ 4 ॥

உன்னுள்ளும் என்னுள்ளும் மற்றவருள்ளும் அனைத்தையும் பொறுக்கும் விஷ்ணு பகவான் வீற்றிருந்தும் நீ வீணில் கோபிக்கிருய்; நீ எல்லோரிடமும் ஆன்மாவையே கண்டு வேற்றுமை உணர்ச்சி என்ற அறியாமையை அகற்று.

नलिनीदलगतसलिलं तरलं
तद्वज्जीवितमतिशयचपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं
लोकं शोकहतं च समस्तम् ॥ ५ ॥

நலிநீதலகத ஸலிலம் தரலம்
தத்வஜ்ஜீவித மதிஶய சபலம் ।
வித்தி வ்யாத்யபிமான க்ரஸ்தம்
லோகம் ஶோக ஹதம் ச ஸமஸ்தம் ॥ 5 ॥

தாமரை இலையில் வீழ்ந்த தண்ணீரைப் போல் வாழ்வு முற்றிலும் நிலையில்லாதது. இச் சம்சாரமனைத்தும் நோய்கள், ஆசாபாசங்கள், துன்பங்கள் ஆகியவற்றுள் சிக்குண்ட தென்பதை உணர்.

நாம் பிறரிடம் கை நீட்டிப் பிச்சை கேட்பது சரியல்ல. ஆனால் கடவுளிடம் கை நீட்டுவதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மனிதனுடைய மனத்தில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடந்து வருகிறது. பிரார்த்தனை என்ற சிறந்த பாதுகாப்பை நம்பாதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகிவிடுவான். பிரார்த்தனை செய்பவன் மனச்சாந்தி பெற்று உலகத்தோடு ஒத்து அன்பு பூண்டு வாழ்வான். பிரார்த்தனை செய்யும் இதயமில்லாமலே, லௌகிக விஷயங்களில் ஈடுபடுகிறவன், தன்னையும் துன்பத்திலாழ்த்தி, உலகத்தையும் துன்பத்திலாழ்த்துவான். ஆதலால், இறந்த பிறகு பிரார்த்தனையினால் நன்மை ஏற்படும் என்பது ஒருபுற மிருக்க, இந்த உலகத்தில் வசிக்கும்போதே மனிதனுக்கு அது அளவற்ற உதவி செய்வதாயிருக்கிறது. நாள்தோறும் நாம் செய்கிற செயல்களில் ஒழுங்கையும் அமைதியையும் ஒய்வையும் நிலைபெறச் செய்வதற்கு பிரார்த்தனைதான் சிறந்த சாதனம். —காந்திஜி.

பாண்டவ கீதையிலிருந்து :—

पाण्डव :—

प्रह्लादनारदपराशरपुण्डरीक-
व्यासाम्बरीषशुकशौनकभीष्मदाल्भ्यान् ।
रुक्मांगदार्जुनवसिष्ठविभीषणादीन्
पुण्यानिमान्परमभागवतान्स्मरामि ॥ १ ॥

பாண்டவ :—

ப்ரஹ்லாத நாரத பராஶர புண்டரீக
வ்யாஸாம்பரீஷ ஶுக ஶௌனக பீஷ்மதால்ப் யான் ।
ருக்மாங்கதார் ஜுன வஸிஷ்ட விபீஷணாதீன்
புண்யானிமான் பரம பாகவதான் ஸ்மராமி ॥ 1 ॥

பாண்டவர் :—பிரகலாதன், நாரதர், பராசரர், புண்டரீகர், வியாசர், அம்பரீஷன், சுகர், சௌனகர், பீஷ்மர், தால்ப்யர், ருக்மாங்கதன், அர்ஜுனன், வசிஷ்டர், விபீஷணன் முதலிய பகவானின் பக்தப் பெருமக்களை நான் நெஞ்சில் கொள்கின்றேன்.

कुन्ति :—

स्वकर्मफलनिर्दिष्टां यां यां योनिं व्रजाम्यहम् ।
तस्यां तस्यां हृषीकेश त्वयि भक्तिदृढाऽस्तु मे ॥ २ ॥

குந்தி :—

ஸ்வகர்மபல நிர்திஷ்டாம்
யாம் யாம் யோனிம் வ்ரஜாம்யஹம் ।
தஸ்யாம் தஸ்யாம் ஹ்ருஷீகேஶ
த்வயி பக்தி த்ருடாஸ்துமே ॥ 2 ॥

குந்தி:—என் கர்மங்களின் விளைவாக எந்தெந்த யோனியில் நான் பிறந்த போதிலும் அவை ஒவ்வொன்றிலும், ஏ, ரிஷீகேசா, உன்னிடம் என் பக்தி உறுதியாயிருப்பதாக!

द्रोण :—

ये ये हताश्चक्रधरेण राजं-
स्त्रैलोक्यनाथेन जनार्दनेन ।
ते ते गता विष्णुपुरीं प्रयाताः ।
क्रोधोऽपि देवस्य वरेण तुल्यः ॥ ३ ॥

த்ரோண :—

யே யே ஹதாஶ்சக்ரதரேண ராஜம்
ஸ்த்ரைலோக்ய நாதேன ஜனர்தனேன।
தே தே கதா விஷ்ணு புரீம் ப்ரயாதா:
க்ரோதோபி தேவஸ்ய வரேண துல்ய: ॥ 3 ॥

துரோணர்:—ஏ ராஜனே! மூவுலகிற்கும் அதிபனை சக்ராயுதம் தரித்த ஜனர்தனனின் கையினுல் மாண்டவர் ஒவ்வொருவரும் வைகுண்டப் பதவி பெற்ருர். பகவானது கோபமும் கருணையை ஒத்ததே.

गान्धारी :—

त्वमेव माता च पिता त्वमेव
त्वमेव बंधुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव
त्वमेव सर्वं मम देवदेव ॥ ४ ॥

காந்தாரீ :—

த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஶ்ச ஸகாத்வமேவ।
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மமதேவதேவ ॥ 4 ॥

காந்தாரி:—ஏ தேவ தேவனே! நீயே என் தாய், நீயே என் தந்தை, நீயே என் சகோதரரும் உற்ருரும்; நீயே என் செல்வமும் எல்லாமும் ஆவாய்.

विराट :—

नमो ब्रह्मण्यदेवाय गोब्राह्मणहिताय च ।
जगद्धिताय कृष्णाय गोविन्दाय नमो नमः ॥ ५ ॥

விராட :—

நமோப்ரஹ்மண்யதேவாய கோப்ராஹ்மண ஹிதாயச ।
ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥ 5 ॥

விராடன்:—தேவருள் பெரிய தேவனுக்கு, ஆவினங்களையும் பிரம்ம வித்துக்களையும் காப்பவனுக்கு, உலகிற்கு நன்மையே புரியும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு, கோவிந்தனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.

प्रह्लाद :—

नाथ योनिसहस्रेषु येषु येषु व्रजाम्यहम् ।
तेषु तेष्वचला भक्तिरच्युतास्तु सदा त्वयि ॥ ६ ॥
या प्रीतिरविवेकानां विषयेष्वनपायिनी ।
त्वामनुस्मरतः सा मे हृदयान्मापसर्पतु ॥ ७ ॥

ப்ரஹ்லாத :

நாத யோனிஸஹஸ்ரேஷு
யேஷுயேஷுவ்ரஜாம் யஹம் ।
தேஷு தேஷ்வசலா பக்தி
ரச்யுதாஸ்து ஸதா த்வயி ॥ 6 ॥
யாப்ரீதிரவிவேகானும்
விஷயேஷ் வனபாயினீ ।
த்வாமனுஸ் மரத: ஸா மே
ஹ்ருதயான் மாபஸர்ப்பது ॥ 7 ॥

பிரகலாதன் :—ஏ நாதா! ஆயிரமாயிரம் யோனிகளில் நான் எங்கே பிறந்தாலும் அங்கெல்லாம், ஏ அச்சுதா, உன்னிடம் என் பக்தி எப்பொழுதும் அசையாதிருப்பதாக. விவேகமற்றவர்கள் விஷயங்களில் எத்தகைய மிகுந்த ஆசை கொண்டிருக்கிருர்களோ அதே வகையான நன்மையே பயக்கும் பற்று உன்னேயே நினைக்கும் என்னுள்ளத்தினின்று என்றும் அகலாதிருப்பதாக.

भरद्वाज :—

लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराजयः ।
येषामिन्दीवरश्यामो हृदयस्थो जनार्दनः ॥ ८ ॥

பரத்வாஜ :—

லாபஸ் தேஷாம் ஜயஸ்தேஷாம்
குதஸ்தேஷாம் பராஜய: ।
யேஷா மிந்தீவரஶ்யாமோ
ஹ்ருதயஸ்தோ ஜனர்தன: ॥ 8 ॥

பரத்வாஜர் :—நீலத் தாமரை போன்ற சியாமள வர்ணனை லக்ஷ்மீபதியாம் ஜனர்தனன் எவருடைய உள்ளத்தில் வீற்றிருக்கின்ருனே அவர்களுக்கு எதிலும் வெற்றி, எங்கும் இலாபமே. அவர்களுக்குத் தோல்வி என்பதேது?

मार्कण्डेय :—

सा हानिस्तन्महच्छिद्रं सा चान्धजडमूढता ।
यन्मुहूर्तं क्षणं वापि वासुदेवं न चिंतयेत् ॥ ९ ॥

மார்க்கண்டேய :—

ஸாஹாநிஸ்தன் மஹச்சித்ரம்
ஸாசாந்த ஜடமூடதா ।
யன்மு ஹூர்த்தம் க்ஷணம் வாபி
வாஸுதேவம் நசிந்தயேத் ॥ 9 ॥

மார்க்கண்டேயன் :—வாசுதேவனை எந்தக்கணத்தில் நாம் நினையாதிருந்தோமோ அப்பொழுது நமக்கு பெரிய நஷ்டம் நேர்ந்தது, நம் வாழ்வில் பெரிய துளை விழுந்தது என்று எண்ணிக்கொள். அதையே குருடென்றும், அறிவின்மையென்றும், மடமையென்றும் அறி.

शौनक :—

भोजनाच्छादने चिन्तां वृथा कुर्वन्ति वैष्णवा: ।
योऽसौ विश्वम्भरो देव: स भक्तान्किमुपेक्षते ॥ १० ॥

ஶௌனக :—

போஜனச்சாதனே சிந்தாம்
வ்ருதா குர்வந்தி வைஷ்ணவா: ।
யோஸௌ விஶ்வம் ப்ரோ தேவ:
ஸ பக்தான்கிமுபேக்ஷதே ॥ 10 ॥

சௌனகர் :—விஷ்ணுவின் அடியார்கள் வீணில் உணவுக்கும் உடைக்கும் என்ன செய்வோ மென்று அல்லலுறுகிறார்கள். உலகனைத்தையும் பாதுகாக்கும் பகவான் தம் பக்தரை அசட்டை செய்வாரா?

सनत्कुमार :—

आकाशात्पतितं तोयं यथा गच्छति सागरम् ।
सर्वदेवनमस्कार: केशवं प्रति गच्छति ॥ ११ ॥

ஸனத்குமார :—

ஆகாஶாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் ।
ஸர்வ தேவ நமஸ்கார: கேஶவம் ப்ரதி கச்சதி ॥ 11 ॥

சனத்குமாரர் :—வானின்றிழியும் நீர் கடலிற் கலப்பதைப் போல் எந்த தேவனைக் குறித்துச் செய்யும் வணக்கமும் பகவான் கேசவனையே சேரும்.

முகுந்த மாலையிலிருந்து :—

श्रीवल्लभेति वरदेति दयापरेति
भक्तप्रियेति भवलुण्ठनकोविदेति ।
नाथेति नागशयनेति जगन्निवासे-
त्यालापिनं प्रतिदिनं कुरु मां मुकुन्द ॥ १ ॥

ஶ்ரீவல்லபேதி வரதேதி தயாபரேதி
பக்த ப்ரியேதி பவ லுண்டன கோவிதேதி।
நாதேதி நாகஶயநேதி ஜகன்னிவாஸே-
த்யாலாபினம் ப்ரதிதினம் குருமாம் முகுந்த॥

ஏ முகுந்தா ! நான் பிரதி தினமும், 'ஏ ஶ்ரீ வல்லபா, ஏ வரதா, ஏ கருணைக் கடலே, ஏ பக்தப்ரியா, ஏ பிறப் பிறப்பை அழிப்பதில் வல்லவனே, ஏ நாதா, ஏ நாகசயனு, ஏ ஜகந்நிவாசா' என்றெல்லாம் உன் பெயர்களைச் சொல்லிக் கொண்டே இருக்குமாறு ஒருவழி செய்யேன் !

मुकुन्द मूर्ध्ना प्रणिपत्य याचे
भवन्तमेकान्तमियन्तमर्थम् ।
अविस्मृतिस्त्वच्चरणारविन्दे
भवे भवे मेऽस्तु भवत्प्रसादात् ॥ २ ॥

முகுந்த மூர்த்னு ப்ரணிபத்ய யாசே
பவந்த மேகாந்தமி யந்த மர்த்தம் ।
அவிஸ் ம்ருதி ஸ்த்வச்சரணு ரவிந்தே ।
பவே பவே மேஸ்து பவத் ப்ரஸாதாத் ॥ 2 ॥

ஏ முகுந்தா, உன் கருணையினால் நான் எந்த ஜன்ம மெடுத்தாலும் உன் பாதத் தாமரைகளை மறவாதிருக்கு மாறு அருளவேண்டுமென்ற ஒன்றையே உன்னிடம் தலை வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன்.

नास्था धर्मे न वसुनिचये नव कामोपभोगे
यद् भाव्यं तद् भवतु भगवन् पूर्वकर्मानुरूपम् ।
एतत् प्रार्थ्यं मम बहुमतं जन्मजन्मान्तरेऽपि
त्वत्पादाम्भोरुहयुगगता निश्चला भक्तिरस्तु ॥ ३ ॥

நாஸ்தா தர்மே நவஸு நிசயே
நைவ காமோப போகே
யத் பாவ்யம் தத் பவது பகவன்
பூர்வ கர்மானு ரூபம் ।
ஏதத் ப்ரார்த்யம் மம பஹுமதம்
ஜன்ம ஜன்மாந்தரேऽபி
த்வத் பாதாம்போ ருஹயுககதா
நிச்சலா பக்தி ரஸ்து ॥ 3 ॥

ஏ பகவானே! எனக்கு தர்மம் செய்வதிலோ, பொருள் சேர்ப்பதிலோ, விஷய போகங்களிலோ ஆசையில்லை. முன் செய்த கர்மங்களின்படி இவையெல்லாம் நடப்பது போல் நடக்கட்டும். என் மனத்திலோ எடுக்கவிருக்கும் பிறவிகள் அத்தனையிலும் உன் பாதத் தாமரைகள் இரண்டினிடத்தும் எனக்கு அசையாத பக்தி இருந்துவர வேண்டுமென்ற பெரு விண்ணப்ப மொன்றே நிலை பெற்றுள்ளது.

दिवि वा भुवि वा ममास्तु वासो
नरके वा नरकान्तक प्रकामम् ।
अवधीरितशारदारविन्दौ
चरणौ ते मरणेऽपि चिन्तयामि ॥ ४ ॥

திவி வா புவி வா மமாஸ்து வாஸோ
நரகே வா நரகாந்தக ப்ரகாமம் ।
அவதீரித ஶாரதார விந்தௌ
சரணௌ தே மரணே பி சிந்தயாமி ॥ 4 ॥

நரகத்தை அழிப்பவனே, நான் சுவர்க்கம் புகுந்தாலும் சரி, புவியிலிருந்தாலும் சரி, நரகில் இழிந்தாலும் சரியே, நான் இறக்கும்தருவாயில் சரத்காலத் தாமரையினும் அழகிய உன் பாதங்களை நினைத்துக்கொண்டே இருக்கு மாறு அருளுவாயானால் அதுவே எனக்குப் போதும்.

कृष्ण त्वदीयपदपङ्कजपञ्जरान्त-
मद्यैव मे विशतु मानसराजहंसः ।
प्राणप्रयाणसमये कफवातपित्तैः
कण्ठावरोधनविधौ स्मरणं कुतस्ते ॥ ५ ॥

க்ருஷ்ண த்வதீய பத பங்கஜ பஞ்ஜ ராந்த
மத்யைவ மே விஶது மானஸ ராஜ ஹம்ஸ: ।
ப்ராண ப்ரயாண ஸமயே கபவாத பித்தை:
கண்டா வரோதன விதௌ ஸ்மரணம் குதஸ்தே ॥

ஏ கிருஷ்ணா, என் சித்த மென்ற மானச ஹம்சம் இன்றே உன் பாதத் தாமரையாம் கூண்டில் அடைபடுவ தாக ; ஏனெனில் உயிர் போக விருக்கையில் கபவாத பித் தங்களினால் தொண்டை அடைபட்டுப் போகும் பொழுது உன் பெயரைச் சொல்ல எவ்வாறு இயலும் ?

भवजलधिगतानां द्वन्द्ववाताहतानाम्
सुतदुहितृकलत्रत्राण भारावृतानाम् ।
विषमविषयतोये मज्जतामप्लवानाम्
भवति शरणमेको विष्णुपोतो नराणाम् ॥ ६ ॥

பவஜலதி கதானும் த்வந்த்வ வாதாஹதானும்
ஸுத துஹித்ரு கலத்ரத்ராண பாரா வ்ருதானும் ।
விஷமவிஷயதோயே மஜ்ஜதாம ப்ல வானும்
பவதி ஶரண மேகோ விஷ்ணு போதோ நராணும் ॥ 6 ॥

சம்சார சாகரத்தில் ஆழ்ந்து இன்பதுன்பங்களென்ற இரு திசைக் காற்றுகளினுல் அலைப்புண்டு பெண், பிள்ளை, மனைவி ஆகியோரைக் காத்தலென்ற சுமை அமுக்க, கொடிய விஷய போகங்களென்ற நீரில் மூழ்கித் தத்தளிக்கும் மக்களுக்கு விஷ்ணுபகவான் என்ற தோணி ஒன்றே அடைக்கலம்.

भवजलधिमगाधं दुस्तरं निस्तरेयम्
कथमहमिति चेतो मा स्म गाः कातरत्वम् ।
सरसिजदृशि देवे तावकी भक्तिरेका
नरकभिदि निषण्णा तारयिष्यत्यवश्यम् ॥ ७ ॥

பவஜலதி மகாதம் துஸ்தரம் நிஸ்தரேயம்
கதமஹமிதி சேதோ மாஸ்மகா: காதரத்வம் ।
ஸரஸிஜ த்ருஶி தேவே தாவகீ பக்திரேகா
நரகபிதி நிஷண்ணு தாரயிஷ்யத்யவஶ்யம் ॥

ஏ சித்தமே, நான் அடியும் அக்கரையும் தெரியாத இந்த சம்சார சாகரத்தை எப்படிக் கடப்பே னென்று நீ அஞ்சாதே. தாமரை மலரைப்போன்ற கண்களுள்ள நரகத்தை அழிக்கும் தேவனிடம் நீ அநந்ய பக்தி செய்வாயானுல் அவன் உன்னைக் கரை சேர்ப்பானென்பது உறுதி.

बद्धेनाञ्जलिना नतेन शिरसा गात्रैः सरोमोद्गमैः
कण्ठेन स्वरगद्गदेन नयनेनोद्गीर्णबाष्पाम्बुना ।
नित्यं त्वच्चरणारविन्दयुगलध्यानामृतास्वादिना-
मस्माकं सरसीरुहाक्ष सततं संपद्यतां जीवितम् ॥

பத்தேனுஞ்ஜலினு நதேன ஶிரஸா
காத்ரை: ஸரோ மோத்கமை :
கண்டேன ஸ்வரகத்கதேன நயனே
னேத்கீர்ண பாஷ் பாம்புனு ।
நித்யம் த்வச்சரணுரவிந்த யுகல
த்யானு ம்ருதாஸ் வாதினு
மஸ்மாகம் ஸரஸீரு ஹாக்ஷ ஸததம்
ஸம்பத்ய தாம் ஜீவிதம் ॥ 8 ॥

கூப்பிய கைகளும் வணங்கிய தலையும் உடலெல்லாம் மயிர்க் கூச்செறிய தழுதழுத்த குரலுடன் கண்களில் நீர் மல்க உன் பாத கமலங்கள் இரண்டின் தியானமுதத்தைப் பருகிய வண்ணம் ஏ கமலக் கண்ணு, என் வாழ்க்கை நடப்பதாக !

मदन परिहर स्थितिं मदीये
मनसि मुकुन्दपदारविन्दधाम्नि ।
हरनयनकृशानुना कृशोऽसि
स्मरसि न चक्रपराक्रमं मुरारेः ॥ ९ ॥

மதன பரிஹர ஸ்திதிம் மதீயே
மனஸி முகுந்த பதாரவிந்த தாம்னி ।
ஹர நயன க்ருஶானுனு க்ருஶோஸி
ஸ்மரஸி ந சக்ரபராக்ரமம் முராரே: ॥ 9 ॥

ஏ மன்மதா, முகுந்தனின் பாத கமலங்களுக்கு இருக்கைபோன்ற என் உள்ளத்திலிருந்து உடனே ஓடிப் போ. சிவனது கண்ணின் தீ பட்டு நீ ஏற்கெனவே எரிந்து மெலிந்தது போதாதா ? அதன் பிறகும் முராரியின் சக்கர வல்லமையை ஏன் எண்ணிப் பார்க்கிருயில்லை ?

अिदं शरीरं शतसन्धिजर्जरं
पतत्यवश्यं परिणामपेशलम् ।
किमौषधैः क्लिश्यसि मूढ दुर्मते
निरामयं कृष्णरसायनं पिब ॥ १० ॥

இதம் ஶரீரம் ஶத ஸந்தி ஜர்ஜரம்
பதத்யவஶ்யம் பரிணும பேஶலம் ।
கி மௌஷதை: க்லிஶ்யஸி மூட துர்மதே
நிராமயம் க்ருஷ்ண ரஸாயனம் பிப ॥ 10 ॥

இவ்வுடல் நூற்றுக்கணக்கான பூட்டுக்கள் சேர்ந்து அமைந்ததாகையால் வலுவற்றது; ஒரு நாள் இது கீழே விழவே போகிறது. அப்படியிருந்தும் மடமையும் துர்ப் புத்தியும் உள்ளவனே, பிற மருந்துகளையெல்லாம் அருந்தி ஏன் வருந்துகின்ருய்? கிருஷ்ணன் என்ற அரு மருந்தைக் கொள்.

नमामि नारायणपादपङ्कजम्
करोमि नारायणपूजनं सदा ।
वदामि नारायणनाम निर्मलम्
स्मरामि नारायणतत्वमव्ययम् ॥ ११ ॥

நமாமி நாராயண பாத பங்கஜம்
கரோமி நாராயண பூஜனம் ஸதா ।
வதாமி நாராயண நாம நிர்மலம்
ஸ்மராமி நாராயணதத்வ மவ்யயம் ॥ 11 ॥

நான் நாராயணனுடைய பாத கமலங்களை வணங்கு கின்றேன். நாராயணனை என்றென்றும் வழிபடுகின்றேன். நாராயணன் புனிதத் திருநாமத்தை ஜபிக்கின்றேன். அழி வற்ற நாராயண தத்துவத்தை நினைக்கின்றேன்.

अनन्त वकुण्ठ मुकुन्द कृष्ण
गोविन्द दामोदर माधवेति ।
वक्तुं समर्थोऽपि न वक्ति कश्चि-
दहो जनानां व्यसनाभिमुख्यम् ॥ १२ ॥

அனந்த வைகுண்ட முகுந்த க்ருஷ்ண
கோவிந்த தாமோதர மாத வேதி ।
வக்தும் ஸமர்த் தோபி ந வக்தி கஶ்சி-
தஹோ ஜனனும் வ்யஸநாபிமுக்யம் ॥ 12 ॥

அனந்தன், வைகுண்டன், முகுந்தன், கிருஷ்ணன், கோவிந்தன், தாமோதரன், மாதவன் என்ற திரு நாமங்களை ஓதச் சக்தியிருந்தும் இவற்றை ஒருவரும் ஓதுவதில்லை. ஆஹா! விஷய போகங்களில் மக்களுக்குள்ள பற்றை என்னென்பது!

* * * *

विपदो नैव विपदः संपदो नैव संपदः ।
विपद्विस्मरणं विष्णोस्संपन्नारायणस्मृतिः ॥

விபதோ நைவ விபத:
ஸம்பதோ நைவ ஸம்பத: ।
விப த்விஸ்மரணம் விஷ்ணோ:
ஸம்பந் நாராயணஸ் ம்ருதி: ॥

ஆபத்துக்கள் உண்மையில் ஆபத்துக்கள் அல்ல; செல்வங்களும் உண்மைச் செல்வங்களல்ல. விஷ்ணுவை மறப்பதைப் போன்ற பேராபத்தும் நாராயணனை நினைவில் இருத்துவதைப் போன்ற பெருஞ் செல்வமும் இல்லை.

विष्णुर्वा त्रिपुरान्तको भवतु वा ब्रह्मा सुरेन्द्रोऽथवा
भानुर्वा शशलक्षणोऽथ भगवान् बुद्धोऽथ सिद्धोऽथवा ।
रागद्वेषविषार्तिमोहरहितः सत्त्वानुकंपोद्यतो
यः सर्वैः सह संस्कृतो गुणगणैस्तस्मै नमः सर्वदा ॥

விஷ்ணுர்வா த்ரிபுராந்தகோ பவதுவா
ப்ரஹ்மா ஸுரேந்த்ரோऽதவா
பானுர்வா ஶஶலக்ஷணோऽத பகவான்
புத்தோऽத ஸித்தோऽதவா ।
ராகத்வேஷ விஷார்த்தி மோஹரஹித:
ஸத்வானுகம்போத்யதோ
ய: ஸர்வை: ஸஹ ஸம்ஸ்க்ருதோ குணகணை:
தஸ்மை நம: ஸர்வதா ॥

அவர் விஷ்ணுவோ, சிவனே, பிரம்மாவோ, இந்திரனே, சூரியனே, சந்திரனே, புத்த பகவானே, மஹா வீரரோ, யாராயினும் சரியே; விருப்பு வெறுப்புகளாம் விஷயங்கள் தரும் அல்லலால் விளையும் மெய்ம்மறதி எவருக்கில்லையோ, எல்லா உயிர்களிடத்தும் கருணையுடன் நற்குணங்களனைத்தையும் பெற்றுச் சிறந்து விளங்குகிறரோ அவருக்கு என்றென்றும் நம் வணக்கம் உரித்து.

பிரார்த்தனை செய்பவன் ஒரு விஷயத்தை நினைவிலிருத்திக்கொள்ளவேண்டும். அதாவது, மாசு படிந்த மனதுடன் செய்யும் பிரார்த்தனையினுல் பயன் ஏதுமில்லை.

பசியெடுத்தவன் நல்ல ஆகாரம் கிடைத்தவுடன் அதை எவ்வளவு சுவையோடு உண்கிறனே அதேபோல, ஆன்மத் தவிப்பெடுத்த உயிரானது இதய பூர்வமாகச் செய்கிற பிரார்த்தனையில் ஈடுபடுகிறது. அதிலுள்ள மந்திர சக்தியை அனுபவித்தோர் நாட்கணக்காக உணவில்லாமல் இருக்கமுடியும்; ஆனுல் பிரார்த்தனை செய்யாமல் அவர்களால் ஒரு கணம் கூட இருக்க முடியாது.

—காந்திஜி.

சமரசப் பிரார்த்தனை

ॐ तत् सत् श्री नारायण तू, पुरुषोत्तम गुरु तू ।
सिद्‌ध बुद्ध तू, स्कन्द विनायक, सविता पावक तू ॥
ब्रह्म मज़्द तू, यह्व शक्ति तू, ईशु-पिता प्रभु तू ।
रुद्र-विष्णु तू, राम-कृष्ण तू, रहीम ताओ तू ॥
वासुदेव गो-विश्वरूप तू, चिदानन्द हरि तू ।
अद्वितीय तू, अकाल निर्भय आत्मलिंग शिव तू ॥

ஓம் தத் ஸத் ஸ்ரீ நாரயண தூ,
புருஷோத்தம குரு தூ ।
ஸித்த புத்த தூ, ஸ்கந்த விநாயக,
ஸவிதா பாவக தூ ॥
பிரஹ்ம மஜ்த தூ, யஹ்வ ஶக்தி தூ,
ஈஶு-பிதா ப்ரபு தூ ।
ருத்ர-விஷ்ணு தூ, ராம-கிருஷ்ண தூ,
ரஹீம் தாவோ தூ ॥
வாஸுதேவ கோ-விஶ்வரூப தூ,
சிதாநந்த ஹரி தூ ।
அத்விதீய தூ, அகால நிர்பய
ஆத்மலிங்க ஶிவ தூ ॥

ஓம் தத்ஸத் ஸ்ரீ நாராயணனீ, புருஷோத்தம குரு நீ ।
சித்த-புத்தனீ, கந்த-விநாயக, ஸவிதா-பாவகனீ ॥
பிரம்ம-மஜ்த நீ, யஹுவசக்தி நீ, ஏசு-பிதா பிரபு நீ ।
ருத்ர-விஷ்ணு நீ, ராமகிருஷ்ணனீ, ரஹீம-தாவோ நீ ॥
வாசுதேவ கோவிச்வரூபனீ, சிதானந்த ஹரி நீ ।
அத்விதீயனீ, அகாலநிர்பய ஆன்மலிங்கசிவனீ ॥

பதினொரு விரதங்கள்

अहिंसा सत्य अस्तेय
ब्रह्मचर्य असंग्रह ।
शरीरश्रम अस्वाद
सर्वत्र भयवर्जन ॥
सर्वधर्मी समानत्व
स्वदेशी स्पर्शभावना ।
हीं अेकादश सेवावीं
नम्रत्वें व्रतनिश्चयें ॥

அஹிம்ஸா ஸத்ய அஸ்தேய
ப்ரஹ்மசர்ய அஸங்க்ரஹ ।
ஶரீரஶ்ரம அஸ்வாத
ஸர்வத்ர பயவர்ஜன ॥
ஸர்வதர்மீம் ஸமானத்வ
ஸ்வதேஶீ ஸ்பர்ஶ பாவனு ।
ஹீம் ஏகாதஶ ஸேவாவீம்
நம்ரத்வேம் வ்ரதநிஶ்சய யேம் ॥

கொல்லாமை, உண்மை, கள்ளாமை, பிரம்மசரியம், வெளவாமை, உடலுழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சர்வசமய சமரசம், சுதேதி, தீண்டாமை அகற்றல் என்ற இப்பதினொரு விரதங்களைப் பணிவொடு உறுதியாய்ப் புரிதல் வேண்டும்.

அடிமை வாழ்வு மனிதனுடைய கௌரவத்திற்குப் பொருந்தாததாகும். ஹிருதய பூர்வமாய்ப் பிரார்த்தனை செய்பவன் அடிமை வாழ்வை ஏற்கவே மாட்டான். —காந்திஜி.

பார்ஸி வேத மந்திரம்

मज़्दा अत मोइ् वहिश्ता
स्रवा ओस्चा श्योथनाचा वओचा ।
ता-तू वहू मनंधहा
अशाचा इषुदेम स्तुतो
क्षमा का श्रथ्रा अहूरा फेरषेम्
वस्ना हइ् श्येम् दाओ अहूम् ॥

மஜ்தா அத மோயி வஹிஶ்தா
ஸ்ரவா ஓஸ்சா ஶ்யோதநாசா வஓசா ।
தா-தூ வஹூ மனந்தஹா
அஶாசா இஷு தேம ஸ்துதோ
க்ஷமாகா ஶ்ரத்ரா அஹூரா பேரஷேம்
வஸ்நா ஹஇ ஶ்யேம் தாஓ அஹூம் ॥

ஏ ஹோர் மஜ்த், தலைசிறந்த மதத்தின்
மந்திரங்களையும் கிரியைகளையும் எனக்கு போதி.
நான் நேரிய வழியே நடந்து
உன் மகிமையைப் பாடுவேன்.
உன் திருவுள்ளம் போல் என்னை அழைத்தேகு.
என் வாழ்வுக்குப் புதுமை யளி.
எனக்கு சுவர்க்க சுகம் தா.

புத்த மத மந்திரம்

नम्यो हो रेंगे क्यो ।
नम्यो हो रेंगे क्यो ।
नम्यो हो रेंगे क्यो ।

நம்யோ ஹோ ரேங்கே க்யோ ।
நம்யோ ஹோ ரேங்கே க்யோ ।
நம்யோ ஹோ ரேங்கே க்யோ ।

ஸத் தர்மத்தை நடத்தியவராய் எல்லையிலா ஒளி பொருந்திய புத்த பகவானுக்கு வணக்கம்.

(இதுவே மும்முறை ஓதப்படும்)

குரானின் பாத்திஹா

अऊज़ु बिल्लाहि मिनश् शैत्वानिर् रजीम् ॥
बिस्मिल्लाहिर् रह्मानिर् रहीम् ।

अल् हम्दु लिल्लाहि रब्बिल् आ़लमीन् ।
अर् रहमानिर् रहीमि
मालिकि यौमिद् दीन् ।
ईयाक नअबुदु व ईयाक नस्तअ़ीन् ।
अिह्दिनस् सिरात्वल् मुस्तक़ीम् ।
सिरात्वल् लज़ीन अन्अ़म्त अ़लैहिम् ।
ग़ैरिल् मग् दूबि अ़लैहिम् व लद् द्वाँल्लीन् ॥

அஊஜு பில்லாஹி மினஷ் ஷைத்வாநிர் ரஜீம் ॥
பிஸ் மில்லாஹிர் ரஹ்மாநிர் ரஹீம் ।

அல் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆல மீன் ।
அர் ரஹ்மாநிர் ரஹீமி
மாலிகி யெளமித் தீன் ।
ஈயாக நஅபுது வ ஈயாக நஸ்தயீன் ।
இஹ்தினஸ் ஸிராத்வல் முஸ்தகீம் ।
ஸிராத்வல் லஜீன் அன்அம்த அலைஹிம் ।
கைரில் மக் த்வூபி அலைஹிம் வலத் த்வால்லீன் ॥

நான் பாபான்மாவான சைத்தானிடமிருந்து தப்ப பரம்பொருளினிடம் சரண்புகுகின்றேன்.

பிரபுவே, உன் பெயரைச் சொல்லியே
நான் எதையும் தொடங்குகின்றேன்.
நீ கருணைக்கடல், அருளாளன் ;
நீ அகில உலகையும் சிருஷ்டிப்போன், தலைவன்.
யாம் நின்னையே வழிபட்டு
நின் உதவியையே நாடுகின்றோம்.
நீயே இறுதியில் நியாயம் வழங்குவாய்.
நீ எமக்கு நேர் வழியைக் காட்டு—
நின் கருணைக்குப் பாத்திரரானவர் வழியை,
நின் கோபத்திற்கு இலக்கான,
வழி தவறியவர் போன வழியையல்ல.

ஆங்கில கீதம்

(1)

Lead kindly Light, amid the encircling gloom
    Lead Thou me on :
The night is dark and I am far from home,
    Lead Thou me on.
Keep Thou my feet, I do not ask to see
The distant scene ; one step enough for me.
I was not ever thus, nor prayed that Thou
    Shouldst lead me on ;
I loved to choose and see my path ; but now
    Lead Thou me on.
I loved the garish day, and spite of fears,
Pride ruled my will : remember not past years.
So long Thy power hath blest me, sure it still
    Will lead me on,
O'er moor and fen, o'er crag and torrent, till
    The night is gone ;
And with the morn, those angel faces smile,
Which I have loved long since and lost awhile.

(2)

When I survey the wondrous Cross
On which the Prince of Glory died,
My richest gain I count but loss,
And pour contempt on all my pride.
Forbid it, Lord, that I should boast
Save in the Cross of Christ, my God;
All the vain things that charm me most,
I sacrifice them to His Blood.
See from His Head, His Hands, His Feet,
Sorrow and love flow mingling down;
Did e'er such love and sorrow meet,
Or thorns compose so rich a crown?
Were the whole realm of nature mine,
That were an offering far too small;
Love so amazing, so divine,
Demands my soul, my life, my all.
To Christ, who won for sinners grace,
By bitter grief and anguish sore,
Be praise from all the ransomed race,
For ever and for evermore.

(3)

Nearer, my God, to Thee, nearer to Thee!
E'en though it be a Cross that raiseth me,
    Still all my song shall be—
Nearer, my God, to Thee, nearer to Thee.
Though like the wanderer (the sun gone down,)
Darkness be over me—my rest a stone;
    Yet in my dreams I'd be
Nearer, my God, to Thee, nearer to Thee.
Then let the way appear steps unto heaven,
All that Thou sendest me in mercy given;
    Angels to beckon me
Nearer, my God, to Thee, nearer to Thee.
Then with my waking thoughts bright with
    Thy praise,
Out of my stony griefs *Beth-el* I'll raise;
    So by my woes to be
Nearer, my God, to Thee, nearer to Thee.
Or if on joyful wing cleaving the sky,
Sun, moon, and stars forgot, upwards I fly,
    Still all my song shall be,
Nearer, my God, to Thee, nearer to Thee.

(4)

Rock of ages, cleft for me,
Let me hide myself in Thee ;
Let the Water and the Blood
From Thy riven Side which flowed,
Be of sin the double cure,
Cleanse me from its guilt and power.
Not the labour of my hands
Can fulfil Thy law's demands ;
Could my zeal no respite know,
Could my tears for ever flow,
All for sin could not atone ;
Thou must save, and Thou alone.
Nothing in my hand I bring,
Simple to Thy Cross I cling ;
Naked, come to Thee for dress,
Helpless, look to Thee for grace ;
Foul, I to the Fountain fly ;
Wash me, Saviour, or I die.
While I draw this fleeting breath,
When my eyelids close in death,
When I soar through tracts unknown,
See Thee on Thy Judgment Throne ;
Rock of ages, cleft for me,
Let me hide myself in Thee.

குஜராத்தி கீதம்

वैष्णव जन तो तेने कहीए
जे पीड पराई जाणे रे।
पर दुःखे उपकार करे तोये,
मन अभिमान न आणे रे। ध्रु

सकळ लोकमां सहुने वंदे
निन्दा न करे केनी रे।
वाच काछ मन निश्चळ राखे।
धन धन जननी तेनी रे। १

समदृष्टि ने तृष्णा त्यागी
पर-स्त्री जेने मात रे।
जिह्वा थकी असत्य न बोले
परधन नव झाले हाथ रे। २

मोह माया व्यापे नहि जेने
दृढ़ वैराग्य जेना मनमां रे।
रामनामशुं ताळी लागी,
सकळ तीरथ तेना तनमां रे। ३

वणलोभी ने कपट रहित छे,
काम क्रोध निवार्या रे।
भणे नरसैंयो तेनुं दरसन करतां
कुळ एकोतेर तार्यां रे। ४

பல்லவி

வைஷ்ணவ ஜன தோ தேனே கஹீயே
ஜே பீட பராயீ ஜாணே ரே ।
பர துக்கே உபகார கரே தோயே
மன அபிமான ந ஆணே ரே ॥

சரணம்

ஸகள லோக மா ஸஹுனே வந்தே
நிந்தா ந கரே கேனீ ரே ।
வாசகாச மன நிஶ்சல ராகே
தன தன ஜனனீ தேனீ ரே ॥ 1

ஸமத்ருஷ்டினே த்ருஷ்ணு த்யாகீ
பரஸ்திரீ ஜேனே மாதரே ।
ஜிஹ்வா தகீ அஸத்ய ந போலே
பரதன நவ ஜாலே ஹாத ரே ॥ 2

மோஹ மாயா வ்யாபே நஹி ஜேனே
த்ருட வைராக்ய ஜேனு மன் மாரே ।
ராம நாம ஶும் தாளீ லாகீ
ஸகள தீரத தேனு தன்மாம் ரே ॥ 3

வணலோபீ னே கபட ரஹித சே
காமக்ரோத நிவார்யா ரே ॥
பணே நரஸை யோ தேனு தர்ஸன கரதாம்
குல ஏகோதேர தார்யா ரே ॥ 4

வங்காளி கீதம்

(१)

सुजलां सुफलां मलयज शीतलां शस्यश्यामलां मातरम् ।
शुभ्रज्योत्स्ना पुलकितयामिनीं पुल्लकुसुमित
[द्रुमदलशोभिनीम् ।
सुहासिनीं सुमधुरभाषिणीं सुखदां वरदां—मातरम्
—वन्दे

त्रिंशत्कोटि-कंठ-कलकल-निनाद कराले ।
द्वित्रिंशत्कोटिभुजैर्धृत-खर करवाले ।
के बोले मा तुमि अबले ?

बहुबलधारीणीं नमामिं तारिणीं रिपुदलवारिणीं
[मातरम्—वन्दे ।
तुमि विद्या, तुमि धर्म, तुमि हृदि, तुमि मर्म
[त्वं हि प्राणाः शरीरे ।
बाहुते तुमि मा शक्ति, हृदये तुमि मा भक्ति ।
तोमारअि प्रतिमा गाडि मंदिरे मंदिरे —वन्दे ।
त्वं हि दुर्गा दशप्रहरणधारिणी कमला
[कमलदलविहारिणी ।
वाणी विद्यादायिनी नमामि त्वाम् ।
नमामि कमलां अमलां अतुलां सुजलां सुफलां
[मातरम्—वन्दे ।
श्यामलां सरलां सुस्मितां भूषितां धरणीं भरणीं मातरम्
—वन्दे मातरम् ।

ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஶீதலாம்
ஶஸ்ய ஶ்யாமலாம் மாதரம் (வந்தே)

ஶுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஶோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம். (வந்தே)

த்ரிம்ஶத் கோடி கண்ட கலகல நிநாத கராலே
த்வித்ரிம்ஶத் கோடி புஜைர் த்ருத கர கரவாலே
கே போலே, மா தூமி அபலே ?
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம். (வந்தே)

தூமி வித்யா, தூமி தர்ம,
தூமி ஹ்ருதி, தூமி மர்ம,
த்வம்ஹி ப்ராண : ஶரீரே
பாஹுதே தூமி மா ஶக்தி
ஹ்ருதயே தூமி மா பக்தி
தொமாரயி ப்ரதிமா காடி மந்திரே மந்திரே. (வந்தே)

த்வம்ஹி துர்கா தஶப்ரஹ்ரண தாரிணீ
கமலா கமலதல விஹாரிணீ
வாணீ வித்யா தாயிநீ, நவாமி த்வாம். (வந்தே)

நமாமி கமலாம், அமலாம், அதுலாம்,
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ஶ்யாமலாம், ஸரலாம், ஸுஸ்மிதாம், பூஷிதாம்,
தரணீம், பரணீம், மாதரம். (வந்தே மாதரம்)

(२)

जनगणमन–अधिनायक जय हे भारत–भाग्यविधाता।

पंजाब सिन्धु गुजरात मराठा, द्राविड उत्कल बंग।
विन्ध्य हिमाचल यमुना गंगा, उच्छल–जलधि तरंग।
तव शुभ नामे जागे, तव शुभ आशिष मागे।
गाहे तव जय गाथा।
जनगण-मंगलदायक जय हे भारत-भाग्यविधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे। १

अहरह तव आह्वान प्रचारित, शुनितव उदार वाणी।
हिन्दु-बौद्ध शीख जैन पारसिक मुसलमान ख्रिस्तानी।
पूरब पश्चिम आसे, तब सिंहासन पासे।
प्रेमहार होय गांथा।
जनगण-ऐक्यविधायक जय हे, भारत भाग्यविधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे। २

पतन-अभ्युदय-बंधुर पंथा युग-युग-धावित यात्री।
हे चिरसारथि! तव रथचक्रे मुखरित पथ दिनरात्री।
दारुण विप्लव माझे, तव शंखध्वनि बाजे।
संकटदुःख त्राता।
जनगण-पथपरिचायक जय हे भारत-भाग्यविधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे। ३

घोर तिमिरघन निबिड निशीथे पीडित मूर्छित देशे।
जाग्रत छिल तव अविचल मंगल नत नयने अनिमेषे।

दुःस्वप्ने आतङ्के, रक्षा करिले अंके।
स्नेहमयी तुमि माता।
जनगण-दुःखत्रायक जय हे भारत-भाग्य विधाता।
जय हे ! जय हे ! जय हे ! जय जय जय जय हे ! ४

रात्रि प्रभातिल उदिल रविच्छवि पूर्वउदयगिरि-भाले।
गाहे विहंगम, पुण्य समीरण नवजीवनरस ढाले।
तव करुणारुण रागे, निद्रित भारत जागे।
तव चरणे नत माथा।
जय जय जय हे जय राजेश्वर भारत-भाग्य विधाता।
जय हे ! जय हे ! जय हे ! जय जय जय जय हे ! ५

ஜன கணமன-அதிநாயக ஜய ஹே பாரத-
பாக்யவிதாதா

பஞ்ஜாப ஸிந்து குஜராத மராடா, த்ராவிட உத்கல
வங்க
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா, உச்சல ஜலதி தரங்க
தவ ஶுப நாமே ஜாகே, தவ ஶுப ஆஶிஷ மாகே
காஹே தவ ஜய காதா
ஜனகண-மங்கள தாயக ஜயஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜய ஹே!

அஹரஹ தவ ஆஹ்வான ப்ரசாரித ஶுனி தவ
உதாரவாணீ
ஹிந்து பௌத்த ஸீக ஜைன பாரஸிக
முஸல்மான க்றிஸ்தானி

பூரப பஶ்சிம ஆஸே, தவஸிம்ஹாஸன பாஸே
ப்ரேம ஹார ஹோய காதா
ஜனகண-ஐக்யவிதாயக ஜய ஹே, பாரத-
பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜய ஹே!

பதன-அப்யுத பந்துர பந்தா யுக யுக தாவித யாத்ரீ
ஹே சிரஸாரதி! தவரத சக்ரே முகரித பத தினராத்ரீ
தாருண விப்லவ மாஜே, தவ சங்கத்வனி பாஜே
ஸங்கடதுக்க த்ராதா.
ஜனகண-பதபரிசாயக ஜய ஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜயஹே!

கோர திமிரகன நிபிட நிஶீதே பீடித மூர்ச்சித தேஶே
ஜாக்ரத சில தவ அவிசல மங்கள நதநயனே
அநிமேஷே
துஸ்வப்னே ஆதங்கே ரக்ஷா கரிலே அங்கே
ஸ்நேஹமயீ துமி மாதா
ஜனகண-துக்கத்ராயக ஜய ஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜயஹே.

ராத்ரி ப்ரபாதில உதில ரவிச்சவி பூர்வஉதயகிரி-பாலே
காஹே விஹங்கம புண்ய ஸமீரண நவஜீவனரஸடாலே
தவ கருணாருணராகே, நித்ரித பாரத ஜாகே
தவ சரணேநத மாதா
ஜய ஜய ஜய ஹே ஜய ராஜேஶ்வர பாரத-
பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜயஹே!

१. रघुपति-राघव राजाराम।
पतित-पावन सीताराम्॥
भज मन प्यारे राम रहीम।
भजमन प्यारे कृष्ण करीम॥
ईश्वर अल्ला तेरे नाम।
सबको सन्मति दे भगवान्॥

२. श्रीराम, जय राम, जय जय राम।
जय राम, जय राम, जय जय राम॥

३. हरे राम, हरे राम, हरे राम, हरे।
भज मन निशि दिन प्यारे॥

४. राजाराम राम राम।
सीताराम राम राम॥

५. श्रीकृष्ण गोविन्द हरे मुरारे।
हे नाथ नारायण वासुदेव॥

६. नारायण नारायण जय गोविन्द हरे।
नारायण नारायण जय गोपाल हरे॥

७. हरे राम, हरे राम राम राम हरे हरे।
हरे कृष्ण, हरे कृष्ण, कृष्ण कृष्ण, हरे हरे॥

८. राधाकृष्ण जय कुंज विहारी।
मुरलीधर गोवर्धनधारी॥

९. निवृत्ति ज्ञानदेव सोपान मुक्ताबाई।
एकनाथ नामदेव तुकाराम॥

1. ரகுபதி ராகவ ரரஜா ராம் ।
பதித பாவன ஸீதாராம் ॥
பஜமன ப்யாரே ராம ரஹீம் ।
பஜமன ப்யாரே கிருஷ்ண கரீம் ॥
ஈஶ்வர அல்லா தேரே் நாம் ।
ஸப்கோ ஸன்மதி தே பகவான் ॥

2. ஶ்ரீ ராம ஜய ராம ஜய ஜயராம ।
ஜய ராம ஜய ராம ஜய ஜயராம ॥

3. ஹரே ராம ஹரே ராம ஹரே ராம ஹரே ।
பஜமன நிஶிதின ப்யாரே ॥

4. ராஜா ராம் ராம் ராம் ।
ஸீதராம் ராம் ராம் ॥

5. ஶ்ரீ கிருஷ்ண கோவிந்த ஹரே முராரே ।
ஹேநாத நாராயண வாஸுதேவா ॥

6. நாரயண, நாராயண ஜய கோவிந்த ஹரே ।
நாராயண நாராண ஜய கோபால ஹரே ॥

7. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

8. ராதாகிருஷ்ண ஜய குஞ்ஜவிஹாரீ ।
முரளீதர கோவர்தன தாரீ ॥

9. நிவிருத்தி ஞானதேவ ஸோபான முக்தாபாய் ।
ஏகநாத நாமதேவ துகாராம் ॥

பாசுரங்கள்

சம்பந்தர்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொரு ளாவது
நாதனுமம் நமச்சிவாயவே.

அப்பர்

1. குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
   குமிண் சிரிப்பும்,
   பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
   பால் வெண்ணீறும்,
   இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங்
   காணப் பெற்ருல்,
   மனித்தப் பிறவியும் வேண்டுவதே
   இந்த மாநிலத்தே.

2. படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ்சென்
   நாவிற் கொண்டேன்,
   இடைக்கலம் அல்லேன் எழு பிறப்பும் உனக்
   காட் செய்கின்றேன்,
   துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
   தூ நீறணிந்துன்,
   அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
   சிற்றலம் பலத்தரனே.

3. முற்ருத பால் மதியஞ் சூடினனை
மூவுலகுந்தானுய முதல்வன் தன்னைச்
செற்ருர்கள் புரமூன்றுஞ் செற்ருன் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்ருலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்ருனைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

4. பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னுள்
பாமாலை பாடப் பயில்வித்தானை,
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்,
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்ருதே ஆற்றநாள் போக்கினேனே.

5. பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணுதார் அவர் தம்மைப் பேணுதானைத்
துறவாதே கட்டறுத்தசோதியானைத்
தூ நெறிக்குந் தூ நெறியாய் நின்ருன் தன்னைத்
திறமாய எத்திசையுந்தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிறமா மொளியானை நீடூரானை
நீதனே னென்னே நான் நினையாவாறே.

6. பின்ருனும் முன்ருனு மானன் தன்னைப்
பித்தர்க்குப் பித்தனுய் நின்ருன் தன்னை,
நன்ருங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானன் தன்னைச்

சென்றோங்கி விண்ணளவுந் தீயானானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை,
நின்றாய நீடூர் நிலாவினானை
நீதனே னென்னே நான் நினையாவாறே.

7. இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
இனிய நினையாதார்க் கின்னா தானை,
வல்லானை வலலடைந் தார்க் கருளும் வண்ணம்
மாட்டதார்க் கெத்திறத்தும் மாட்டாதானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை,
நெல்லால் விளை கழனி நீடு ரானை
நீதனே னென்னே நான் நினையாவாறே.

8. மாதர்ப் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவாரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப்பாதம்
கண்டறி யாதன கண்டேன்.

9. நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே என்நாளும் துன்பமில்லை.
தாம் ஆர்க்கும் குடியல்லாத்தன் மையான
சங்கரன் நற்சங்கவெண் குழைஓர்காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

10. அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ.
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்படைய மாதரும் ஒண் பொருளும் நீ
யொருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ யேறூர்ந்த செல்வன் நீயே !

11. புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாஉன்னடி
யென் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ்
வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்
பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்
வைத்த தீவண்ணனே

12. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

13. சுண்ண வெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவளநிறமும்
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

14. திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே யென்னுறவே யென்னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற
கருவே யென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையா வண்ணம்
ஆவடு தண்டுறை யுறையும் அமரரேறே.

சுந்தரர்

1. பித்தா பிறை சூட பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தா வுனக்காளாயினியல்லே னெனலாமே.

2. மற்றுப்பற் றெனக்கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

3. பொன்னார் மேனியனே புலித்
தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
கொன்றை யணிந்தவனே,
மன்னே மாமணியே மழ
பாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா
லினியாரை நினைக்கேனே.

திருமூலர்

1. முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வாஞேரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணு தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் ருரே.

2. வள்ளற் றலைவனை வானநன் ஞடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர் கொ லோ என்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தாளுமே.

3. இல்லனு மல்லன் உளனல்லன் எம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் ருனே.

4. விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானே.

5. உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந் தறியாரே.

6. இங்குநின் ருனங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் ருன்புவ ஞபதி புண்ணியன்
கங்குல்நின் ருன்கதிர் மாமதி ஞாயி
றெங்குநின் ருன்மழை போலிறை தானே

7. அன்பு சிவமென் றறியார் இரண்டென்பர்
அன்பு சிவமென் றறிவார்க் கிரண்டில்லை
அன்பு சிவமென் றறிவால் அறிந்தபின்
அன்பே சிவமாய் அறிந்து கொண்டேனே.

நம்மாழ்வார்

1. உண்ணும் சோறு பருகுநீர்
தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் எம் பெருமா னென்றென்றே
கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன் சீர்
வளமிக்கவனூர் வினவித்
திண்ணம் என் இளமான்
புகுமூர் திருக்கோளூரே.

2. தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைகின்றான்;
என்மகன் கோவிந்தன் கூத்தினை, இளமா மதி!
நின்முகம் கண் உளவாகில், நீ இங்கே நோக்கிப்போ.

திருமங்கை ஆழ்வார்

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார்படு துயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

ஆண்டாள்

1. கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் லாழி வெண் சங்கே!

2. ஆழி மழைக்கண்ணு ஒன்றும் நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

3. மாய னைமன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

4. புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக் கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

5. மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணஉன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

6. கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா உன்தன்னோ(டு)
உறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினல் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

7. சிற்றஞ்சிறுகாலை வந்துன்னைச் சேவித்துன்
பொற்ரு மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்தநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னேடு
உற்ருேமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

மாணிக்கவாசகர்

1. அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாம்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்று ஒரு இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

2. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

3. பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொறிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

4. மெய் தானரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான்றலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னுங்
கைதா னெகிழ விடே னுடையா
யென்னைக் கண்டு கொள்ளே.

5. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினேங் கேட்டிலையோ

வாழியீ தென்ன வுறக்கமோ வாய் திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

6. முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற வுன் சீரடியோம் [வோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்கா
அன்னவரே யெங்கணவர் ஆவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

7. பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே
பேதை யொரு பாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொரு தோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

8. முத்தி நெறி யறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்
பத்தி நெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத் த னெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

9. நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தை யெனக்
கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்
[சோவே.

சேக்கிழார்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பட்டினத்தார்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும்
நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப் பிழையுந்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சியேகம்பனே.

தாயுமானவர்

அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்தியாகி,
அருளொடு நிறைந்ததெது ? தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்து, உயிர்க்குயிராய்த்
தழைத்ததெது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது ? சமய கோடிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வம் என்று
எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது ?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது ? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லை உளதெது ? அது
கருத்திற்கு இசைந்தது ; அதுவே
கண்டன எலாம் ; மோன உரு வெளியதாகவுங்
கருதி அஞ்சலி செய்குவாம்.

அருணகிரிநாதர்

1. பாதிமதிநதி போது மணி சடை
  நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள்
  பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள்
  மாயனரிதிரு மருகோனே
காலனெனை யணு காமலுனதிரு
  காலில் வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல
  காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள்
  சூழவரவரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு
  வாமிமலை தனிலுறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
  வேலை விடவல பெருமாளே.

2. ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே,
  ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே,
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே,
  குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே,
  வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே,
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்,
  ஆதி அருணசலம் அமர்ந்த பெருமாளே !

இராமலிங்கர்

1. மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறியாத பெருந்தவருள்ளக்
கோயிலிருந்த குணப் பெருங்குன்றே
வேற்றறியாத சிற்றம்பலக் கனியே
வித்தையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறியாத வென் சாற்றுங் களித்தாய்
தனி நடராஜ என் சற்குரு மணியே.

2. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பு அருளும் களிப்பே !
காணுர்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே !
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியே !
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடு நின்ற நடுவே !
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே !
என் அரசே ! யான் புகலும் இசையும் அணிந்தருளே !

3. எத்துணையும் பேதமுருதெவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணியுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்ருர் யாவரவ
ருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான்
தேர்ந்தேன் அந்த,
வித்தகர்தம் அடிக்கேவல் செய்யவே என்
சிந்தை மிக விழைந்ததாலோ.

4. கோதகன்ற யோகர் மனக்குகையில் வாழுங் குருவே
ஷண்முகங் கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியூறும் வானமுதே
ஆனந்த மழையே மாயை

வேதகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான வேழமே
மெய்யின்பவிருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த செல்வமே
எல்லையிலாச் சீர்மை தேவே.

5. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்
பசியினாலிளைத்தே
வீடுதோறிரந்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக்
கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோ ரென்னேருறக்
கண்டுளந்துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர்
கண்டேயிளைத்தேன்.

6. எவ்வுயிர்த்திரளு மென்னுயி ரெனவே யெண்ணி நல்
லின்புறச் செயவும்,
அவ்வுயிர்களுக்கு வருமிடை யூற்றை யகற்றியே
அச்ச நீக்கிடவும்,
செவ்வையுற்றுனது திருப்பதம்பாடிச் சிவசிவ
வென்று கூத்தாடி,
ஒவ்வுறு களிப்பாலழிவுறா திங்கே ஓங்கவு
மிச்சை காணெந்தாய்.

7. கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயரச்ச மாதிகளைத்
தருண நின்னருளால் தவித்தவர்க் கின்பந்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்,
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும் அம்பலந்த னிலே,
மருவிய புகழைவழுத்தவும் நின்னை வாழ்த்தவும்
இச்சைகாண் எந்தாய்.

8. மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொரு சிறிதெனினுங்

கண்ணுறப் பார்த்தும் செவியுறக்கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்,
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா
லிசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்,
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான்
நல்குத லெனக்கிச்சை யெந்தாய்.

9. சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே,
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணே நீ ரழிதலழகலவே ;
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞானநிருத்தமிடுந்
தனித்தலைவ ரொருத்த ரவர்தாமே,
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே.

10. அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்:
ஆருயிர்கட்கெல்லாம் நானன்பு செயல்வேண்டும் ;
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தை நினதருட் புகழை இயம்பியிடல் வேண்டும் ;
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும் ;
தப்பேது நான் செயினும் நீபொறுத்தல் வேண்டும் ;
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

11. அருளா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்:
அணுத்துணையுஞ் சினங்காமம் அடையாமை வேண்டும் ;
மருளாய வுலகமெலாம் மருணீங்கிஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும் ;
இருளாமை யுறல் வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல் வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும் ;
பொருளாமோர் திருவடிவிலுடையாயும் நானும்
புணர்ந்து கலந்தொன்ருகிப் பொருந்துதல் வேண்டுவனே.

பாடல்கள்

பாரதியார்

1\. ஆத்தி சூடி இளம் பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கரு நிறங் கொண்டுபாற் கடல் மிசை கிடப்போன்
மகமது நபிக்கு மறை அருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே ; அதன் இயல் ஒளியுறும் அறிவாம் ;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினர்.
அதன் அருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

2\. பொழுது புலர்ந்தது ; யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும் ;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம் ;
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே !
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தருளாயே !

3\. மதலைய ரெழுப்பவுந் தாய் துயில்வாயோ ?
மாநிலம் பெற்றவ ளிஃதுணராயோ ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ ?
கோமகளே ! பெரும் பாரதர்க் கரசே !
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய் !
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய் !
ஈன்றவளே ! பள்ளி யெழுந்தருளாயே !

4. ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித் திடுவோம்
குண முயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே. (ஓம் சக்தி)

வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம் ;
சுற்றி நில்லாதே போ !—பகையே !
துள்ளி வருகுது வேல். (ஓம் சக்தி)

பாம்புத் தலை மேலே—நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம் ;
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம். (ஓம் சக்தி)

செல்வத் திருமகளைத்—திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெலாந் தருவாள்—நம தொளி
திக் கனைத்தும் பரவும். (ஓம் சக்தி)

தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள் ;
பூமணித் தாளினையே—கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (ஓம் சக்தி)

சொல்லுக் கடங்காவே—பராசக்தி
சூரத் தனங்க ளெல்லாம் ;
வல்லமை தந்திடு வாள்—பராசக்தி
வாழி யென்றே துதிப்போம். (ஓம் சக்தி)

5. தேடியுனைச் சரணடைந்தேன்,
தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய்,
கேட்ட வரந் தருவாய்.

பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய்,
குறைக ளெல்லாந் தீர்ப்பாய்.

எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி;
ஒப்பி யுன தேவல் செய்வேன்
உன தருளால் வாழ்வேன்.

சக்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி,
பக்தியுடன் போற்றி நின்றால்
பய மனைத்துந் தீரும்.

ஆதாரம் சக்தி யென்றே
அருமறைகள் கூறும்;
யாதானுந் தொழில் புரிவோம்;
யாதுமவள் தொழிலாம்.

துன்பமே யியற்கை யெனும்
சொல்லை மறந்திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம்
யாவு மவள் தருவாள்.

நம்பினார் கெடுவதில்லை,
நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாம்.

ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி.

பல்லவி

6. முருகா—முருகா—முருகா

சரணங்கள்

வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே! (முருகா)

சுருதிப் பொருளே, வருக.
துணிவே, கனலே, வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். (முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே, சரணம். (முருகா)

அறிவா கியகோ யிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

குருவே, பரமன் மகனே,
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
சமரா திபனே, சரணம், சரணம். (முருகா)

7. ஆறு சுடர் முகங்கண்டு விழிக்
கின்ப மாகுதே—கையில்
அஞ்ச லெனுங் குறிகண்டு மகிழ்ச்சி
யுண்டாகுதே.

நீறுபடக் கொடும்பாவம் பிணி பசி
யாவையும்—இங்கு
நீக்கி யடியரை நித்தமுங் காத்
திடும் வேலவா !

கூறுபடப் பலகோடி யவுணரின்
கூட்டத்தைக்—கண்டு
கொக்கரித் தண்டங்குலுங்க நகைத்
திடும் சேவலாய் !

மாறுபடப் பலவேறு வடிவோடு
தோன்றுவாள்—எங்கள்
வைரவி பெற்ற பெருங்கனலே,
வடிவேலவா !

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

8. உஜ்ஜயினீ ! நித்ய கல்யாணீ !
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி (உஜ்ஜயினீ)

உஜ்ஜய காரண சங்கர தேவீ
உமா ஸரஸ்வதீ ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜயினீ)

வாழி புனைந்து மஹேசுவர தேவன்,
தோழி, பதங்கள் பணிந்து துணிந்தனம். (உஜ்ஜயினீ)

ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத்தை நமக்கருளிச் செய்யும் உத்தமி (உஜ்ஜயினீ)

காவடிச் சிந்து.

ராகம்—ஆனந்த பைரவி. தாளம்—ஆதி.

9. காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின் மீது
காளிசக்தி யென்ற பெயர்கொண்டு—ரீங்
காரமிட்டுலவு மொருவண்டு—தழல்
காலும் விழி நீல வன்னமூல அத்து வாக்களெனும்
கால்களாறுடைய தெனக்கண்டு—மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.

மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணு மண்ணுமான சக்திவெள்ளம்—இ
விந்தையெல்லா மாங்கதுசெய் கள்ளம்—ப
வேதமா யதன்முனுள்ள நாதமாய் விளங்குமிந்
·வீரசக்தி வெள்ளம் விழும் பள்ளம்—ஆக
வேண்டுநித்த மென்றனேழை யுள்ளம்.

அன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்ப
ஆக்க நீக்கம் யாவுமவள் செய்கை—இதை
ஆர்ந்துணர்ந்தவர்களுக்குண் டுய்கை—
ஆதியா யநாதியாய கண்டவறி வாவளுன்றன்
அறிவு மவள் மேனியிலோர் சைகை—அ
ஆனந்தத்தி னெல்லையற்ற பொய்கை.

இன்ப வடிவாகி நிற்பள் துன்பெலா மவளிழைப்
இஃதெலா மவள்புரியு மாயை—அவள்
ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை—எ
எண்ணியே ஓம் சக்தியெனும் புண்ணிய முனிவர்
மெய்துவார் மெய்ஞ்ஞான மெனுந்தீயை—எரித்
தெற்றுவாரிந் நானெனும் பொய்ப் பேயை.

ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும்—ஒன்றே
யாகினுலுலகனைத்தும் சாகும்—அவை [இதை
யன்றியோர் பொருளுமில்லை, அன்றியொன்றுமில்லை—
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
அறிவு தான் பரமஞான மாகும்.

நீதியா மரசுசெய்வர் நிதிகள்பல கோடி துய்ப்பர்
நீண்டகாலம் வாழ்வர் தரைமீது—எந்த
நெறியு மெய்துவர் நினைத்தபோது—அந்த
நித்தமுத்த சுத்த புத்த சத்த பெருங் காளி பத
நீழலடைந் தார்க்கில்லை யோர்தீது—என்று
நேர்மை வேதஞ் சொல்லும் வழியீது.

10. மோகத்தைக் கொன்றுவிடு—அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு—அல்லாலதில்
சிந்தனை மாய்த்துவிடு

யோகத்திருத்திவிடு—அல்லா லென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத்திருந்துலகம்—இங்குள்ளன்
யாவையும் செய்பவளே!

பந்தத்தை நீக்கிவிடு—அல்லா லுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு—அல்லாலிதைச்
செத்த வுட லாக்கு

இந்தப் பதர்களையே—நெல்லாமென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளிலுமே—உள்ளே நின்
றியங்கி யிருப்பவளே.

உள்ளம் குளிராதோ—பொய்யாணவ
ஊன மொழி யாதோ ?
கள்ள முருகாதோ—அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ ?

வெள்ளக் கருணையிலே—இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ ?
விள்ளற் கரியவளே—அனைத்திலு
மேவி யிருப்பவளே !

வாழ்த்து

11. வாழ்க நீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீ வாழ்க ! வாழ்க !

12. வாழிய செந்தமிழ் ! வாழ்க நற் றமிழர் !
வாழிய பாரத மணித் திருநாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மை வந் தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம் வளர்ந்திடுக ! மற மடி வுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக !
நந் தேயத்தினர் நாடொறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !